பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 15 வெள்ளிக்கிழமை (28.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :63

## எமது மக்களுக்கு உதவி கிட்டுவதற்காக இலங்கை அரசுடன் பேசிவருகின்றோம்



### முல்லைத்தீவு நலன்புரி நிலையத்தில் பாலசிங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு.ஜன.28

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உலகின் அனுதாபத்தால் கிடைத்த நிதிகள் எம்மக்களின் நல்வாழ்வுக்காகக் கிடைக்க வேண்டும். அதற்காக இலங்கை அரசுடன் ஒருமட்டத்தில் புலிகள் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். கொழும்பிலும் கிளிநொச்சியிலும் உள்ள சமாதான செயலகங்கள் இந்தப் பேச்சுக்களை நடத்தி வருகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த அவர் இயற்கை அனர்த்தம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டார் திருமதி அடேல் பாலசிங்கமும் உடன் வந்திருந்தார்.

வடமராட்சி கிழக்கில் ஆழியவளையில் இருந்து பாலசிங்கம் தம்பதியரை கடற்புலிகளின் படகில் ஏற்றிச்சென்ற தளபதி சூசை பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளை கடலில் இருந்தவாறு அவர்களுக்குக் காண்பித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையும் பாலசிங்கம் தம்பதியர் நேரில்சந்தித்து ஆறுதல் கூறினர். முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் மத்தியில் உரையாற்றும் போதே பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழ் மக்களையும் உலகில் வாழும் தமிழ்மக்களையும் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கிய துயரச் சம்பவம் ஆழிப்பேரலை அனர்த்தம். இப்படியான பேரழிவுகள் 5 ஆயிரம், 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடக்கின்றன என வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால், சமீப காலத்தில் இப்படியான பெரிய அனர்த்தம் எதுவும் - தமிழீழ மண்ணில் நிகழ்ந்ததில்லை. எமது மக்களுக்கு மட்டுமல்ல. உலகத் தமிழினத்துக்கே பெரும் அதிர்ச்சியை இது கொடுத்துள்ளது.

அனர்த்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட அழிவின் ஆழமான பரிமாணங்களை எல்லாம் நாம் அறிவோம். அதன் தாற்பரியத்தை வார்த்தைகளால் கூறமுடியாது. ஆறுதல்கூடச் சொல்லமுடியாத அளவுக்கு இந்தத் துயரம் உங்களை அழுத்தும் என்பது எங்களுக்குத் தெரியும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலகத் தமிழ் மக்கள் என்ன செய்தார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறவே இங்கு வந்தேன்.

தலைவரின் அழைப்பின்பேரில் நான் இங்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்த மீள்கட்டுமான விவகாரம்:

# இணக்கம் ஏற்படும் வாய்ப்பு!

## பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசு-புலிகள் நெருங்கிவரும் சாதக நிலைமை

கொழும்பு, ஜனவரி 28

**ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கெனப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் அரசுத் தரப்புக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிவருகின்றது. இரு தரப்பும் கீழ் மட்டத்தில் மேற்கொண்டுவரும் தொடர்பாடல்களில் சாதகமான நிலை தென்படுவதாகவும், இரு தரப்பும் நெருங்கிவருவதற்கான சாத்தியங்கள் தோன்றியுள்ளன எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சி தொடர்பாகவும் இரு தரப்பிலுமே அசாதாரண அமைதி - மௌனம் - பேணப்படுகின்றது.

பிரயோசனமான பெறுபேறு ஒன்றை எட்டுவதற்கு வாய்ப்பாகவே இரு தரப்பினரும் ஊடகங்களுக்குச்செய்திகளை வெளியிடாமல்மௌனம் பேணுகின்றனர் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் இணக்கம் ஏற்படாவிட்டால் அனர்த்தப் பாதிப்புக்கான வெளிநாட்டு உதவி இரு தரப்பினருக்குமே

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாலா நாளை புறப்பாடு

கொழும்பு.ஜன.28

வன்னிக்கு வருகைதந்திருக்கும் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் நாளை அங்கிருந்து புறப்படுகின்றார்கள். நாளைமறு தினம் அதிகாலை அவர்கள் கட்டுநாயக்காவிலிருந்து லண்டனுக்குப் பயணமாவார்கள் எனத் தெரிகின்றது.

நோர்வேயின் இரண்டு அமைச்சர்கள் உட்பட உயர்மட்ட அனுசரணைக்குழுவினர் வன்னிக்கு விஜயம் செய்து தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினர். அந்தச்சந்திப்பில் தம்முடன் கலந்துகொள்வதற்காக வன்னிக்கு வருமாறு பாலசிங்கத்தைத் தலைவர் பிரபாகரன் அழைத்திருந்தார்.

அந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக கடந்த 21ஆம் திகதி வன்னி வந்த பாலசிங்கம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி பஸ் கழக ஊழியர் போராட்டம்

கண்டி.ஜன.28

கண்டி மத்திய பஸ் கழகத்தின் புதிய இயக்குநர் சபையைக் கலைக்கக்கோரி ஊழியர்கள் நால்வர் கூரைமீது ஏறி அமர்ந்து நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்கள் எனவும் அவர்கள் மிரட்டியுள்ளனர்.

அதேசமயம், பஸ் சாரதிகளும் நடத்துநர்களுமாக நூற்றுக்கணக்கானோர் கழக அலுவலகம் எதிரே நேற்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். பஸ் இயக்குநர் சபையைக் கலைத்துவிடக் கோரியே

(16ஆம். பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியை மோசமாக விமர்சிக்கும்

## ஜே.வி.பியினரின் போக்குக் குறித்து சு.க.தலைவர்கள் கடுஞ்சீற்றம்!

கொழும்பு.ஜன.28

ஜனாதிபதியையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை யும் கடுமையாக விமர்சித்துவரும் ஜே.வி.பியின் செயற்பாடு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திலேயே இந்தக் கண்டன கணைகள் எழுந்தன.

மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்கள்கலந்துகொண்ட இந்தக்கூட்டத்தில் ஜே.வி.பியினரின் மிரட்டல்களையும், அவர்கள் கண்மூடித்தனமாகச் செய்யும் விமர்சனங்களையும் வெறுமனே பார்த்துக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானுக்குச் சென்ற குழு நாடு திரும்பியது ஆயுதக் கொள்வனவில் கையெழுத்திடாமல்

கொழும்பு.ஜன.28

ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகளுக்கு என ஈரான் சென்ற இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட தலைமையிலான குழுவினர் எந்த ஓர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திடாமல் நாடு திரும்பியுள்ளனர்.

15 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை ஈரானிடம் இருந்து கொள்வனவு செய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவும் -

தேவையான ஆயுதங்களைப் பார்த்து இறுதி செய்து கொள்வனவு ஒப்பந்தத்தில் கைகெழுத்திடுவதற்காகவும் -

இராணுவத் தளபதி தலைமையில் முப்படைகளையும் சேர்ந்த உயர்மட்டக் குழுவினர் இரு வாரங்களுக்கு முன்னர் ஈரானுக்குச் சென்றிருந்தனர். அதற்கு முன் ஜனாதிபதி சந்திரிகா அந்த நாட்டுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அங்குள்ள அரசு மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். அதனடிப்படையிலேயே உயர் மட்டக் குழுவினர் அங்குசென்றிருந்தனர்.

அந்தக் குழுவில் இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட, கடற்படையின் கட்டளையிடும் அதிகாரிரியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம, விமானப் படையின் கட்டளையிடும் அதிகாரி ஏயார் வைஸ் மார்ஷல் லால் பெரேரா, குரூப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக மன்னாரில் பேரணி

மன்னார்.ஜன.28

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சர்வதேச நிவாரண உதவிப்பொருள்களை அனுப்பாது அரசு புறக்கணித்து வருவதையும் - சர்வதேச நிதி உதவிகளைத் தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்காது அதில் இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதையும் - கண்டித்து இன்று முற்பகல் 10 மணிக்கு மன்னாரில் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்ட தொழிற்சங்கங்களின் இணையத்தினால் ஏற்காடு செய்யப்பட்டுள்ள இப்பேரணி, மன்னார் ஆஸ்பத்திரி சந்தியில் ஆரம்பித்து மன்னார் செயலகம் வரை செல்லும். அங்கு மகஜர் கையளிக்கப்படும் என்று தொழிற் சங்கங்களின் இணையம் தெரிவித்தது. (3-12)

## குடாநாட்டு படையினருக்கு மனித உரிமைக் கருத்தரங்கு

குடாநாட்டிலுள்ள படையினருக்கு மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளால் அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் இரண்டாம் திகதி காலை அரியாலையிலுள்ள 514ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த படையினருக்கும் அன்று மாலை யாழ். நகரிலுள்ள 512ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த படையினருக்கும் மறுநாள் 3ஆம் திகதி காலை அச்செழுவிலுள்ள 511 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படையினருக்கும் அன்று மாலை உடுவிலிலுள்ள 513ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படையினருக்கும் இக்கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி தெரிவித்தார். (3-7)

# 15அம்ச பொது அபிவிருத்தித் திட்டம் ஐ.தே.கட்சி இன்று வெளியிடுகின்றது

கொழும்பு,ஜன.28

நாட்டின் தேசிய நலனை மையமாகக் கொண்டு 15அம்ச பொது அபிவிருத்திக் கொள்கைத்திட்டம் ஒன்று இன்று வெளியிடப்படும். அரசியல் கட்சிகளின் கொள்கை முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் முற்று முழுவதும் நாட்டின் அபிவிருத்தியை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு இப்பொதுக் கொள்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். இப்பொது கொள்கைத் திட்டத்தை ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாயபூர்வமாக வெளியிடுவார்.

ஆனாலும், இது ஐ.தே.கவின் கொள்கைத்திட்டம் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு, சுகாதார வசதிகள், மதங்கள், கலாசாரம், வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, தனிமனித உரிமை, மொழி மற்றும் பேச்சுச் சுதந்திரம், நீதித்துறை எனப் பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தலைசிறந்த சட்டவாதிகள், தொழில் அதிபர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகச் சமூகங்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள், அரசியல் அவதானிகள் எனப் பலதரப்பட்டவர்களின் ஆலோசனைகளுடனும், வழிகாட்டல்களுடனும் இப்பொதுக் கொள்கைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாறிமாறி நாட்டை ஆளும் அரசியல்கட்சிகள் ஆட்சிமாறும்போது நாட்டின் அபிவிருத்திக் கொள்கைகளையும் மாற்றிவிடுகின்றன. இதனால் முன்னைய அரசு மேற்கொண்ட திட்டங்கள் அப்படியே கைவிடப்பட்டு விடுகின்றன. அரசுகள் மாறினாலும், ஆளும் கட்சிகள் மாறினாலும் பொதுக்கொள்கையில் மாற்றம் ஏற்படக்கூடாது.

இப்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசு என்றாலும், நாளை ஆட்சிக்கு வரும் அரசாக இருந்தாலும் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இக்கொள்கைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடாக இந்தியாவில் ஆளும் கட்சிகள் மாறினாலும் அபிவிருத்திக்கொள்கை பொதுவான ஒன்றாகவே இருக்கின்றது. இதனால் அங்கு பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றியே இப்பொதுக் கொள்கைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இன்று கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும் வெளியீட்டு விழாவிற்கு சகல அரசியல் கட்சிகளுக்கும், சமயத்தலைவர்களுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (க-3)

# திஸநாயக்கவை விடுவிக்கும் முயற்சிகள் ஓரிரு தினங்களில் மீண்டும் ஆரம்பிக்கும்

### வெலிக்கடைச் சிறைவாசலில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.28

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இன்னும் ஒருசில தினங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று எஸ்பி.திஸநாயககவைச் சந்தித்த பின்னர் சிறைவாசலில் செய்தியாளர்களிடம் பேசும்போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்கான சட்டபூர்வமான நடவடிக்கையை நாம் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மிக மும்முரமாக ஆரம்பித்தோம்.

எமது நடவடிக்கை வெற்றியளிக்கவிருந்த சமயத்தில்தான் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தது. அதனால் எமது நடவடிக்கையை இடைநிறுத்திவிட்டு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் இறங்கினோம்.

"எனக்காவது தங்குவதற்கு இடமுண்டு. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வீடுகள் இன்றி கஷ்ரப்படுகின்றனர். என்னை விடுதலை செய்யும் நடவடிக்கைகளை இடைநிறுத்திவிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் இறங்குங்கள்" என திஸநாயக்கவே கூறியுள்ளார்.

அதன்படி நாம் அவரை விடுதலை செய்யும் நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தினோம்.இப்போது இன்னும் ஒரு சில தினங்களில், மீண்டும் அவரை விடுதலை செய்யும் சட்டபூர்வமான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளவுள்ளோம். அதேசமயம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் எமது நடவடிக்கை இடைநிறுத்தப்படமாட்டாது. இரு நடவடிக்கைகளையும் சமகாலத்தில் முன்னெடுத்துச் செல்வோம் இறுதியில் வெற்றி எமக்கே - எனக்கூறினார். (க-3)

# இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக புலனாய்வு நிபுணர் நாராயணன் நியமனம்

### இலங்கை விவகாரங்களில் பரிச்சயமிக்கவர்

இலங்கை விடயங்களில் பரிச்சயமிக்க புலனாய்வு நிபுணரான கே.நாராயணன் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமரின் விசேட ஆலோசகரும், முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவருமான கே.நாராயணன் (வயது-70). இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டார். இப் பதவியிலிருந்த கே.என்.டிக்சிற் இம்மாத ஆரம்பத்தில் காலமானார். அதைத் தொடர்ந்து இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

நாராயணன் பாதுகாப்புத் துறையின் ஒரு நிபுணர். இலங்கை விடயங்களில் விசேட நிபுணத்துவம் பெற்றவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

1989-90காலப்பகுதியில் இந்திய புலனாய்வு அலுவலகத் தலைவராக நாராயணன் கடமையாற்றினார்.இந்தக் காலப்பகுதியில் இந்தியப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் புலனாய்வு கூட்டுக் குழுத் தலைவரானார்.

அதன்பின். 1991இல் மீண்டும் புலனாய்வு அலுவலகத் தலைவரானார். அடுத்த ஆண்டில் ஓய்வுபெற்றார்.

இந்தியாவில் தற்போதைய அரசு பதவிக்கு வந்த உடனேயே கடந்த மே மாதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் இவரை உள்நாட்டு பாதுகாப்புக்கான விசேட ஆலோசகராக நியமித்திருந்தார். (ஏ-க)

# அமெரிக்காவில் ரயில்கள் மோதுண்டு 11 பேர் உயிரிழப்பு ; 200 பேர் படுகாயம்

### தற்கொலை முயற்சியால் நடந்தது விபரீதம்

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜன.28

அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 11பேர் கொல்லப்பட்டனர்; 200 பேர் படுகாயமடைந்தனர்.இந்த ரயில் விபத்திற்குத் தனிநபர் ஒருவரின் தற்கொலை முயற்சியே காரணமாக அமைந்துள்ளது.

மூன்று ரயில்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதாகப் பொலீஸார் தெரிவித்தனர். லொஸ்ஏஞ்சல்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஜீவான் மனுவேல்அல்-வார்ஸ் (வயது-25) என்ற இளைஞன் தற்கொலை செய்துகொள்வதற்காக 'ஜீப்' வண்டியில் சென்று தண்டாவாளங்களுக்குக் குறுக்கே வாகனத்தை நிறுத்தியுள்ளார்.

இதனால் ஒரே நேரத்தில் வந்த பயணிகள் ரயில்கள் மூன்றும் ஜீப் வண்டியுடன் மோதுண்டு பின்னர் ரயில்கள் ஒவ்வொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அத்தோடு தீயும் பற்றிக்கொண்டது.

இந்த விபத்தால் ரயில்களில் பயணித்த 11பேர் உயிரிழந்தனர்; 200பேர் காயமடைந்தனர்; 40பேருடைய நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

தற்கொலை செய்துகொள்ள முயன்ற ஜீவான என்பவர் தப்பித்துக்கொண்டார். இவரைப் பொலீஸார் கைது செய்தனர். அப்போது அவர் என்னை மன்னித்து விடுங்கள் என்று பொலீஸாரிடம் கதறி அழுதார்.

பொலிஸாரின் விசாரணைகளில் ஜீவான் ஒரு மனநோயாளி என்பது தெரியவந்தது. இதனையடுத்து, ஜீவானிடம் மேலதிக விசாரணைகளை மனநல வைத்திய உதவியுடன் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ரயில்களில் ஏற்பட்ட தீயை, தீயணைப்புப் படையினர் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று தீயணைப்புச் சிப்பாய் ஒருவர் தெரிவித்தார். (க-3)

## மனைவியைக்கொன்று இதயத்தைத் தின்றவருக்கு கென்யாவில் மரணதண்டனை

லண்டன்,ஜன.28

கென்யாவில் மனைவியை அடித்துக் கொன்றுவிட்டு, அவரது நெஞ்சைப் பிளந்து இதயத்தைக் கடித்துத்தின்ற கணவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

இவர் மதுபோதையிலேயே இந்தக் கோரச் சம்பவத்தைப் புரிந்துள்ளார். தான் என்ன செய்கிறார் என்பதை அறியாமலேயே தனது மனைவியை இவ்வாறு கொடூரமான விதத்தில் படுகொலை செய்துள்ளார்.

மாசாய் என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த லோல் வாகனஞ் லெஞ்சிரோனி என்பவருக்கே தனது மனைவியைக்கொன்ற குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரைப் பொலீஸார் கைது செய்யும் போது கையில் தனது மனைவியின் இதயத்துடனும் வாயில் இரத்தத்துடனும் வீட்டில் அமர்ந்திருந்தார் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-3)

# வெவ்வேறு தாக்குதல்களில் ஈராக்கில் 57 பேர் உயிரிழப்பு

பக்தாத்,ஜன.28

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் 58 பேர் உயிரிழந்தனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் பொதுத்தேர்தலைச் சீர்குலைக்கும் விதத்தில் ஈராக்கின் குர்கிஸ்தான் ஜனநாயக ஆட்சி அலுவலகம் ஜோர்தான் எல்லைப்பகுதியில் அமெரிக்க ஹெலிக்கொப்டர் மீது நடத்தப்பட்ட தாக்குதல், ரியாத் நகரில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் மற்றும் பக்தாத் வடக்கில் நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியவற்றிலேயே இந்த 57 பேரும் உயிரிழந்தனர் எனச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் குர்கிஸ்தான் கார்கில் நகரிலுள்ள ஜனநாயக ஆட்சி அலுவலகத்தில் குண்டு நிரப்பப்பட்ட லொறி ஒன்று மோதி வெடித்தது. இதில் 20 பேர் உயிரிழந்தனர்; 30 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலின போது அலுவலகத்தில் நிறுத்தியிருந்த 10 கார்கள் முற்றாக எரிந்து சாம்பராகின என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தற்கொலைக் குண்டுதாக்குதலுக்கு ஈராக்கில் உள்ள அல்கெய்டா அமைப்பின் தலைவர் அபு முஸாப் அல் - ஸர்காவி பொறுப்பேற்றுள்ளார் எனச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஜோர்தான் எல்லைக்கருகே பறந்துக்கொண்டிருந்த அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 31 பேர் உயிரிழந்தனர் என்றும் -

ரியாத் நகரில் இடம்பெற்ற 3 கார்க் குண்டு தாக்குதல்களில் 5 பேர் உயிரிழந்தனர் என்றும் - வடக்கு பக்தாத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர் என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர். (க-3)

## ஓசை அரங்கில்

# இராணுவ ஹெலி விபத்தில் வியட்நாமில் 16 பேர் பலி!

ஹனோய்,ஜன.28

வியட்நாமின் மத்திய பகுதியில் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென விபத்துக்குள்ளானதில் 2 இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர்.

வியட்நாமின் தலைநகர் ஹனோயின் தெற்கிலுள்ள மீதிவிலேயே நேற்றுமுன்தினம் இவ்விபத்து நிகழ்ந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தரையிலிருந்து மேலெழுந்த சில நிமிடங்களிலேயே ஹெலி விபத்துக்குள்ளானதென்றும், அதற்கான காரணங்கள் எதுவும் தெரியவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரது உடல்கள் மீட்கப்பட்டுவிட்டன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று இப்பகுதியில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற விமான விபத்தில் 7 அமெரிக்கர்கள் மற்றும் 9 வியட்நாமியர்கள் உயிரிழந்தனா என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

# அமெரிக்க ஹெலிக்கொப்டர் வீழ்ந்து ஈராக்கில் 31 சிப்பாய்கள் மரணம்!

பக்தாத்,ஜன.28

ஈராக்கின் மேற்குப் பகுதியில் ஜோர்தானின எல்லைக்கருகே நேற்றுமுன்தினம் காலை அமெரிக்க இராணுவப் போக்குவரத்து ஹெலிக்கொப்டர் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் 31 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில் அமெரிக்கா போர் தொடுக்க ஆரம்பித்ததன் பின்னர் அமெரிக்கத் தரப்பில் ஏற்பட்ட மிகப் பெரிய உயிரிழப்புச் சம்பவம் இதுவென்று பி.பி.சியின் பக்தாத் செய்தியாளர் தெரிவித்துள்ளார். கிளர்ச்சியாளர்கள் இந்தக் ஹெலிகொப்டரைச் சுட்டு வீழ்த்தியிருக்கக் கூடும் என்று கூறப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவரைச் சுட்டிக்காட்டி வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேற்படி ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளான காரணம் குறித்த மேலதிக விசாரணைகளை அமெரிக்க இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

# அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக கொண்டலிசாரைஸ் நேற்று பதவியேற்பு

வாஷிங்ரன்,ஜன.28

அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு அமைச்சராக கொண்டலிசாரைஸ் நேற்றுக்காலை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இதுவரை பாதுகாப்பு அமைச்சராக இருந்த கொலின் பவல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க செனட்சபையில் ரைஸ்ஸின் நியமனத்திற்கு வாக்குப் பதிவு நடைபெற்றது. காரசாரமான விவாதத்திற்குப் பின்னர் 85 இற்கு 13 என்ற வாக்கு வித்தியாசத்தில் கொண்டலிசா ரைஸ் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்க அனுமதி வழங்கப்பட்டது.

கொண்டலிசா ரைஸ் நேற்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அவருக்குப் பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

கறுப்பினப் பெண்மணி ஒருவராக ரைஸ் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றிருப்பது அவ்வினத்திற்கே பெருமை சேர்த்துள்ளது.


அத்தோடு, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராகப் பெண் ஒருவர் பதவியேற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும். (க-3)

# பேரலை காவுகொண்டோரின் நீங்காத நினைவு நிகழ்வுகளிலிருந்து....





முல்லைத்தீவில் ஏற்றப்பட்ட தீபங்கள்...



பேரலை தாக்கிய அந்தக் கணத்துடன் தனது இயக்கத்தையும் நிறுத்திக்கொண்ட கடிகாரம்



எச்சத்திலிருந்து நாம் மீண்டும் எழுகின்றோம்






இழந்துபோன உடன் பிறப்புகளுக்கு இதய அஞ்சலி

ஆழிப்பேரலையால் உயிரிழந்தோர் நினைவுதின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றன. அந்த நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.







உயிரிழந்தோரின் ஆத்மசாந்திக்காகக் கிளிநொச்சியில் சர்வமதப் பிரார்த்தனை







திருகோணமலையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின் பதிவுகளிலிருந்து...







இன, மத, மொழி வேறுபாடுகளின்றி வவுனியாவில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வுகளிலிருந்து...

# செலான் வங்கி அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.28

செலான் வங்கியின் பொது முகாமையாளர் அஜித்தா பாஸ்குவல் தலைமையிலான



ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது..... (படங்கள்: வசந்தன்)

உயர்மட்டக் குழுவினர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று குடாநாட்டுக்கு வருகை தந்தனர்.

• செலான் வங்கியின் மனிதவள பிரதிமுகாமையாளர் பண்டுக்க ஜயமன்ன, கணனித் தொழில நுட்பப்பிரிவு பிரதிப் பொதுமுகாமையாளர் கலாநிதி நிசறால் ராமநாயக்க, வியாபார அபிவிருத்திப் பிரிவு முகாமையாளர் வி. குலேந்திரா சேயோன் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பத்மநாதன் நிரஞ்சன் ஆகியோரே நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

நேற்றுக்காலை வருகை தந்த இக்குழுவினர் யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் தொழில் கட்டுமானங்கள் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குச்சென்ற இக குழுவினர், கல்லூரியின் பயன்பாட்டுக்கென சூரிய மின்கலம் மற்றும் 2 கணனிகள் என்பவற்றை வழங்கினர்.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் கே.கணேசை சந்தித்துக் கலந்துரையாடும் இக்குழுவினர் பின்னர் தமது வாடிக்கையாளர்களைச் சந்தித்து நுண் கடன் வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடுவர்.

அதனைத் தொடர்ந்து இவர்கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவர். (எ-5)

## மீன்பிடிச்சங்கத்துக்கு தளபாடங்கள்

மாதகல்,ஜன.28

மாதகல் லூர்துமேரி மீன்பிடிச் சங்கத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது நிதியில் இருந்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்கியுள்ளார் என சங்கத்தலைவர் அ.மரியதாஸ் தெரிவித்துள்ளார். (10-95)

## சமய சந்நிதிகளில்

தொல்புரம்,ஜன.28

தொல்புரம் கொட்டியாம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்மன் தேஸ்தானத்தின் பூரத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பிகை திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (10-202)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் பூரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது. தொடர்ந்து அம்பிகை திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (10-202-ரி)

★ ★ ★

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை இன்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகும்.

இலட்சார்ச்சனையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (10-28-202-ரி)

★ ★ ★

குருநகர் புதுமைமாதா யாத்திரைத் தலத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 3ஆம் திகதி காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான நவநாள்களில் தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு ஆராதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறவுள்ளது. (10-202-51)

# குடும்ப நல அலுவலருக்கு நியமனக் கடிதங்கள்

குருநகர்,ஜன.28

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்குத் தெரிவாகியவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பயிற்சி நெறிக்குத் தெரிவாகியவர்கள் அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதி, கல்விச் சான்றிதழின் மூப்பிரதி, திருமணமாகாதவர் என உறுதிப்படுத்திய கிராமசேவகரின் கடிதம் ஆகியவற்றுடன் எதிர்வரும் முதலாம் திகதி யாழ்.பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றையதினம் அலுவலகத்திற்குச் சமுகமளிக்காதவர்கள் தாமாகவே விலகியவர்களாகக் கருதப்பட்டு வேறு தகுதியானவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனச் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-202)


## கூல் லெமனேற்றிங்

❑ எம்மிடம் உங்களது புத்தக அட்டைகளை கூல் லெமனேசன் செய்துகொள்ளலாம்

❑ எம்மிடம் நினைவு மலர் அட்டைகளைப் பெற்றுக் கொள்வோருக்கு அதனை கூல்லெமனேசன் செய்துகொள்ள ரூபா1/- மட்டுமே!

❑ பலவர்ண நினைவு மலர் அட்டைகள் ரூபா 3.50 இலிருந்து.....

அனைத்திற்கும்சிறந்த இடம்

**சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**

183,பலாலி வீதி, கோண்டாவில், T.P.: 2226722

24 மணிநேரமும் தொடர்புகளிற்கு: 0773068982.

(41382)(42-11)



பருத்தித்துறை, முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின்

**வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

அன்புடையீர்

மேற்படி கூட்டம் நாளை (29.01.2005) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் வ.இ.அருள்தாஸ் தலைமையில் முனை சென்.தோமஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தினர்.

பருத்தித்துறை.

(41377)(39-4211)



## Jaffna National College of Education Graduation Ceremony - 2004

Venue : Jaffna National College of Education Auditorium

Time : 28th January 2005 at 3.30 p.m.

Awarding of Graduation by: Dr. Thirunavukarasu Kamalanathan, President, JNCOE

Blessing by : Mr.K.Bernard, President, VNCOE

Guest of Honour : Mr.P.Vigneswaran, Director of Education. Jaffna Zone.

Co-ordinatar (g.c)

Advertisement spensored by:

தரமான காகிதாதிகள் மற்றும் அச்சகத் தேவைக்கான காகித அட்டைகள் மற்றும் நானாவித பொருள்களுக்கும் நாடுங்கள்.

**பேப்பர் ஹவுஸ்,**

200, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(40388)(42-11)


# நிப்பொன் நிலைய உறுப்பினர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜன.28

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலைய புலமைப்பரிசில் பெற்ற யாழ். மாணவர்கள், தலைமை அலுவலக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நிப்பொன் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்குரிய இவ்வாண்டுக்கான கல்விப்பரிசுப் பொதிகளும், கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளதாக. நிப்பொன் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளரும், யாழ் மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை அறிவித்துள்ளார். (எ-202)

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று

வரணி,ஜன.28

சாவகச்சேரி விவசாய சம்மேளனங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிககிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறும் என சாவகச்சேரி கமநல சேவை நிலைய பொறுப்பதிகாரி செல்வி ந.ஜெகதீஸ்வரி தெரிவித்தார்.

விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (3-170)

# சிங்களக் கலைஞர் பட்டியலில் வேலணை வேணியனுக்கு கலாபூஷண விருது

யாழ்ப்பாணம்,ஜன.28

சிங்களக்கலைஞர்களுக்குரிய பட்டியலில் இடம்பிடித்து அதன்மூலம் கலாபூஷணம் விருது பெற்றுள்ளார் கவிஞர் வேலணை வேணியன்.

கலாசரா அலுவல்கள் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் கலாசரா அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பு -7, ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் உள்ள ஜோனடீ சில்வா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தவிழாவில் 142சிங்களக் கலைஞர்களும், 30தமிழ்க் கலைஞர்களும், 15முஸ்லிம் கலைஞர்களும் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாறு விருது பெற்ற 142சிங்களக் கலைஞர்களின் பட்டியலில் ஒருவராக வேலணை வேணியன் இடம்பெற்றுள்ளார். இவர் அகில இலங்கை கண்ணதாசன் மன்றத்தின் தலைவர் ஆவார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கவிஞர் வேலணை வேணியன்:-

தமிழர் ஒருவர் சிங்களக் கலைஞர்களின் பெயர்கள் உள்ள பட்டியலில் உள்ளீர்க்கப்பட்டு விருபெற்றுள்ளமை இதுவே முதல் தடவை -

புரையோடியுள்ள இனப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளின் முதல் கட்டமாக இந்த விருது வழங்கும் நிகழ்வை நான் கருதுகின்றேன்- என்றார். (எ)


## தவறிவிட்டது

25.01.2005 அன்று யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை சாலை சிற்றூர்தியில் பிற்பகல் 3.00–3.30 மணியளவில் பயணம் செய்தவரின் கைச்சங்கிலி தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர் 0712358927 எனும் தொ. பேசி இலக்கத்துடன் அல்லது ஜெ.பிரதீபன், கலட்டிலேன், கோண்டாவில் மேற்கு என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.


# எரிபொருள் களஞ்சியத்தின் தொலைபேசி சீர்செய்யப்படவில்லை

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறையில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பும் களஞ்சியத் தொகுதிக்கான தொலைபேசி சேவை இதுவரை சீர்செய்யப்படவிலலை.

இதனால், குடாநாட்டில் உள்ள எரிபொருள விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் தமக்குத் தேவையான எரிபொருள்களைப் பெறுவதிலும் தொடர்புகளை வைத்துக் கொளவதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனக் கூறப்பட்டது. (எ-17)

## கியூடெக் நிறுவனம் உதவிகளை வழங்கியது

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மாரீசன்கூடல் குசுமன்துறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் ஊறணி, போயிட்டி, மாரீசன்கூடல், சீந்திப்பந்தல் மீனவர்களுக்கும் சுனாமியால் இடம்பெயர்ந்த தாளையடி, செம்பியன்பற்று, பருத்தித்துறை மக்களுக்கும் மாரீசன்கூடல் பங்குத்தந்தை எ.அன்ரனிதாஸ் தலைமையில் 'கியூடெக்' நிறுவனத்தால் உலர் உணவு வகைகளும், சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இவற்றுடன் தலா ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது. (10-95)


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 30 – 07 – 1918



மறைவு 26 – 01 – 1997

அமரர் இராமலிங்கம் தம்பிப்பிள்ளை (நவரத்தினம் – C.T.B.)

*ஆண்டுகள் எட்டு நகர்ந்தாலும் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய், பாசத்தின் இருப்பிடமாய் இருந்து எம்மை எல்லாம் வளர்த்தெடுத்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! உங்கள் நினைவை என்றென்றும் மறவா*

மனைவி,மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

த.சரஸ்வதி (மனைவி) மாதகல். (41391)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1937 – 11 – 09



விண்ணில் 2004 – 12 – 29

அமரர் அருளப்பு யோசேப்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் மரித்தாலும் வாழ்வான"

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இன்று (28.01.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

7ஆம் கட்டை, சண்டிலிப்பாய். (41378)(26-42-11)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## இணங்கிப் போவதற்கு இறங்கி வரும் அரசு

"ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஐக்கியப்பட்டு - ஒன்றுபட்டு - செயற்பட முன்வாருங்கள்."

- இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைத் தரப்புகள் நான்கும் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் இவ்வாறு கூட்டாக வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் உதவும் நாடுகளின் இணைத் தலைமைக்கு நான்கு தரப்புகள் தெரிவு செய்யப்பட்டன. அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவையே அந்நான்கும்.

இவற்றுள் அமெரிக்கா சர்வதேச வல்லரசு, மூன்றாம் மண்டல நாடுகளுக்கான சர்வதேச உதவி வழங்கும் விவகாரத்தில் தீர்மானிக்கும் சக்திகளில் முக்கிய பங்கு இதற்குண்டு.

அடுத்தது ஜப்பான், இலங்கைக்கு உதவும் வெளிநாடுகளில் முதன்மையானது - வருடாந்தம் அதிகளவில் நிதி வழங்குவது - ஜப்பான்தான்.

மூன்றாவது நோர்வே, இலங்கை அமைதி முயற்சிகளில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நேரில் தொடர்புபட்டு அனுசரணைப் பணி வகிப்பது இந்த நாடு தான். மேற்குலகைப் பொறுத்தவரை இலங்கை அமைதி முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளில் நோர்வேயின் மதிப்பீடு, கணிப்பு, சிபாரிசு எல்லாம் வேதவாக்குப் போன்றவை.

அடுத்தது ஐரோப்பிய ஒன்றியம், பல்வேறு நாடுகளுக்கும் உதவும் மேற்குலக சக்திகளின் ஒன்றியம் இது. ஆஸ்திரியா, பெர்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, போத்துக்கல், ஸ்பெயின், சுவீடன், இங்கிலாந்து உட்பட 25 நாடுகள் இதில் ஒன்றிணைந்துள்ளன. அவை அனைத்தும் ஐக்கியப்பட்டு முடிவெடுக்கவே ஐரோப்பிய ஒன்றியமும், ஐரோப்பிய நாடாளுமன்றமும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் அவதானித்தால் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத்தலைமைத் தரப்பின் வலிமையை - செல்வாக்கை - முக்கியத்துவத்தை - நாம் புரிந்துகொள்ள முடியும்.

அனர்த்தப் பாதிப்புக்கான மீள்கட்டுமான நடவடிக்கைகள் விடயத்தில் ஒன்றித்துச் செயற்படுமாறு இந்த நான்கு தரப்புகளும் விடுத்திருக்கும் கோரிக்கையின் ஆழத்தை அவற்றின் வலுவின் - சக்தியின் - பின்னணியில் நோக்கினால், அந்தக் கோரிக்கையின் அர்த்தத்தை - ஆழ பரிமாணங்களை - நாம் ஓரளவு விளங்கிக்கொள்ளலாம்.

இவற்றைப் பகைத்துக்கொள்வது - அல்லது இவற்றின் கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உதாசீனம் செய்வது - சர்வதேச உதவிகள் கிட்டுவதில் எத்துணைத் தாக்கத்தை - மோசமான பேரிழப்பை - ஏற்படுத்தும் என்பது ஊகித்து உணர முடியாததல்ல.

அதனால் தான் -

வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - போர் அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு, இதுவரை விட்டுக் கொடுத்து உதவமுன்வராமல் - இணங்காமல் - அடம்பிடித்த இலங்கை அரசு, ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புக்கான மீள்கட்டுமான நடவடிக்கை விடயத்தில் மட்டும் தமிழர் தரப்புடன் இணங்கிப் போக முன்வருகின்றது; அதற்காக முயற்சிக்கின்றது; ஐக்கியப்பட்ட செயற்பாடு பற்றித் தத்துவம் பேசுகின்றது; ஒன்றிணைந்த நடவடிக்கை குறித்து பிரஸ்தாபிக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகள் தொடர்பாக இந்த இணைத்தலைமைத் தரப்புகள் நான்கும் உதவும் நாடுகள் சமூகத்திற்கு விடுத்திருக்கும் வழிகாட்டல் நெறியும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாக அமைகின்றது.

"வழங்கப்படும் உதவிகள் விடயத்தில் அடிப்படைக் கோட்பாடுகளான சமத்துவம் (Equity), வெளிப்படைத் தன்மை (Transparency), பொறுப்புக்கூறல் (Accountability) ஆகியவை பின்பற்றப்படுவதை உதவும் நாடுகளும், சம்பந்தப்பட்ட தரப்புகளும் உறுதிப்படுத்த வேண்டும்" என்பதே அந்த வழிகாட்டல் நடைமுறையாகும்.

ஆகவே - இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு சர்வ தேச நிதி உதவி உரிய முறையில் - சரிவர - பங்கிடப் படாமை - அப்படி நீதியாகப் பங்கிடப்படுவது வெளிப்படையாகக் காட்டப்படாமை - அவ்வாறு உரிய பங்கு தமிழர் தாயகத்துக்கு வழங்கப்படும் பொறுப்பை இலங்கை அரசு நிறைவேற்றாமல் இருத்தல் -

போன்றவற்றுக்கு உதவும் நாடுகள் அனுமதிக்க மாட்டா என்பதை இந்த வழி காட்டல் அறிவுறுத்தல் மூலம் அவை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

போரனர்த்தப் பாதிப்புத் தொடர்பான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் பெரும்பாலும் தமிழர்களோடு சம்பந்தப்பட்டவை என்பதால் அவற்றிற்கான ஒரு கட்டமைப்புக்கு இணங்காத சிங்கள, பௌத்த பேரினவான அரசு, இப்போது ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புகளிலிருந்து தென்னிலங்கைச் சிங்களவர்களையும் மீட்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் - அதற்கான சர்வதேச உதவியை எப்படியாகிலும் பெற்றாக வேண்டும் என்ற தேவை இருப்பதால் - அதைப் பெறுவதற்காக வேறு வழியின்றி, தமிழர் தரப்போடு இணங்கிப்போக முயற்சிக்கிறது; அவ்வளவே.

# மணற்காட்டை உலுப்பிய ஆத்மசாந்திப் பிரார்த்தனை

## செவ்வாயன்று அந்தோனியார் ஆலயத்தில் நடந்தது

சுனாமிப் பேரலை அனர்த்தத்தில் மணற்காடு கிராமத்தில் பலியான 71 பேரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் வழிபாடும் நேற்றுமுன்தினம் அங்கு இடம்பெற்றபோது உற்றார், உறவினர், நண்பர்கள், அயல் கிராமத்தவர்கள் அனைவரும் கதறி அழுது புரண்டு கண்ணீர் விட்டனர். அத்துடன் அவர்கள் இட்ட ஓலங்கள் அந்தச் சின்னஞ் சிறிய கிராமத்துக்குச் சென்றவர்களின் மனங்களை சில மணிநேரம் உலுப்பிவிட் டது.

287 குடும்பங்களைக் கொண்ட இக் கிராமத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் 71 பேர் அள்ளுண்டு மரணமானார்கள். இவர்கள் அனைவரது சடலங்களும் மீட்கப்பட்டு இக்கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் புதைக்கப்பட்டன.

இவர்களுக்கான ஒரு மாத ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், கூட்டுத் திருப்பலியும் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு எம்.ஏ.பி.ஆர்.மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள், பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு. இருதயதாஸ் அடிகள், மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு. றோய் பெர்டினன் அடிகள் ஆகியோரால் இணைந்து நடத்தப்பட்டது.

இதில் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த 20 குருவானவர்களும், 25 கன்னியாஸ்திரிகளும் பங்குபற்றினார்கள்.

உயிரிழந்தவர்களின் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயல் கிராமத்தவர்கள் மற்றும் வெளியூர்களைச் சேர்ந்த மக்களும் இப்பிரார்த்தனை பூஜை, வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

முற்பகல் 9.30 மணிக்கு நடைபெற்ற பிரார்த்தனைகள், வழிபாடுகள், கூட்டுத் திருப்பலிகளைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் ஆலய முன்றிலில் அருட்திரு. ஆ.புனிதகுமார் தலைமையில் நடைபெற்றபோது விரிவு ரையாளர் அருட்திரு. மத்தாயஸ் அடிகள் அஞ்சலி உரை நிகழ்த்தினார். ஆசிரியர்கள், மாணவர்கள், கடற்றொழிலாளர்களின் கவிதாஞ்சலியும் இடம்பெற்றது.

### 71 சிலுவைகள் நடுகை

இதனையடுத்து புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து பலியான 71 பேருக்குமான 71 சிலுவைகள் ஊர்வலமாகச் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அந்தந்தப் பெயர்களுக்குரியவர்களுக்கு என்ற வரிசைப்படி சிலுவைகள் நடுகை செய்யப்பட்டன. இதன்போது அங்குதிரண்டிருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரும் கதறி அழுது எழுப்பிய அழு குரல்கள் வானலைகளில் பறந்து சென்றதோடு அக்கிராமத்தையே உலுப்பி விட்டது.

### கடலில் வைத்து ஆசீர்வாதம்

அதன்பின்னர் அப்பகுதி மக்கள் அனைவரும் கடலுக்குள் குருமார்கள், கன்னியாஸ்திரிகள் சகிதம் இறங்கினார்கள். கடலுக்குள் வைத்துக் குருமார்கள் ஆசீர்வதித்தார்கள். ஆசீர்வாதம் நிறைவுற்றதும் அப்பகுதி கடற்றொழில் சங்கத்தால் காலை உணவு அங்கு வைத்து வழங்கப்பட்டது. பின்னர் மதிய உணவு மணற்காடு கிராமமக்கள் தங்கியுள்ள புலோலி, குடத்தனை, வரணி பாடசாலைகளில் வைத்து வழங்கப்பட்டது.

(எ-173)

# இரு தசாப்த யுத்தம் காவுகொண்டது 70 ஆயிரம் பேரை; மூன்று நிமிட சுனாமி பறித்தது 40 ஆயிரம் உயிர்களை!

## மும்மதப் பிரார்த்தனையில் பத்மினி எம்.பி.

தென்மராட்சி,ஜன.28

இரண்டு தசாப்தகால யுத்த அனர்த்தங்களால் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களை வெடிகுண்டுகள் காவுகொண்டன. ஆனால், மூன்று நிமிட சுனாமி கடல் பேரலைகளால் சுமார் 40 ஆயிரம் பொதுமக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

- இவ்வாறு சாவச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுனாமியால் உயிரிழ்ந்த மக்களுக்கான மும்மதப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதரம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்-

இயற்கையின் கோரத் தாண்டவம் இன, மத, மொழி, வயது வேறுபாடுகளைப் பார்க்கவில்லை. அனைவரையும் ஒரே நோக்கில் தாக்கியுள்ளது.

இந்தப் பேரனர்த்தங்களின்போது பலியான, காயமடைந்த, ஊனமடைந்த, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மத, மொழி, இன பாகுபாடின்றி அனைத்து மதங்களும் இணைந்து பிரார்த்தனை மேற்கொள்ள இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகள் மூலமே எமது ஒற்றுமையை உலகறியச் செய்யமுடியும் - என்றார்.

ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் தமதுரையில் -

கண் இமைக்கும் நேரத்தில் பலியான உயிர்களுக்கு அஞ்சலி செலுத்த இங்கு கூடியுள்ளோம்.



கடல் பேரனர்த்தங்களால் பல கோடி ரூபா சொத்துக்கள், உடைமைகள் அழிக்கப்பட்டன. எமது மக்களின் ஒற்றுமையினால் இழந்த சொத்துக்களை, உடைமைகளை மீளப் பெறச் செய்யலாம். ஆனால், பலியான உயிர்களை எம்மால் மீளப்பெறமுடியாது

அந்த உயிர்களின் ஆத்ம சாந்திக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைதிக்கும் மன நிம்மதிக்கும் இவ்வாறான பிரார்த்தனைகள் அவசியமாகின்றன.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் எமது பிரதேசத்திற்கு வந்தபோது தாமாகவே ஓடி வந்து உதவிக்கரம் கொடுத்த மக்களை நாம் மறக்கமுடியாது - என்றார். (10-117)

# உயிரிழந்த அறநெறி மாணவர்களுக்கு இந்து சமய அமைச்சு உதவவில்லை

## மக்கள் முறையிட்டதாக சந்திரநேரு தகவல்

காரைதீவு,ஜன.28

சுனாமியில் பலியாகிய அம்பாறைக் கரையோரப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு இதுவரை எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை.

அதேவேளை - மேற்படி பாடசாலைகளுக்குப் பொறுப்பான இந்து கலாசார அமைச்சின் அதிகாரிகள் எவரும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதலும் கூறவில்லை.

இவ்வாறு சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் தம்மிடம் அழுது முறையிட்டனர் என அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பி.அரியநாயகம் சந்திர நேரு தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அரியநாயகம் சந்திர நேரு மேலும் தெரிவித்ததாவது:-

பாண்டிருப்பில் 62 அறநெறிப் பாடசாலை மாணவரும், 4 அறநெறி ஆசிரியர்களும் பலியாகியுள்ளனர். இதுவரை இவர்களின் குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் எதுவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

அத்துடன் அமைச்சு அதிகாரிகளோ, ஊழியர்களோ நேரில் வருகை தந்து ஆறுதல் வார்த்தைகளும் கூறவில்லை - என்றார். (எ)

## குண்டூசியை தவறுதலாக விழுங்கிய மாணவர்கள்

தென்மராட்சி,ஜன.28

மாணவர்களுக்கு கறுப்புப்பட்டி விநியோகித்த மாணவனும் மாணவியும் குண்டூசியை விழுங்கிய சம்பவம்நேற்று முன்தினம் சாவகச்சேரியில் உள்ள இரு பாடசாலைகளில் இடம்பெற்றது.

கறுப்புப்பட்டி விநியோகித்தவேளையில் வாயில் வைத்திருந்த குண்டூசியைத் தவறுதலாக விழுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த தங்கராசா பிரசன்னா (வயது 18) என்ற மாணவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதேபோன்று மாணவியும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார்.

(10-117)

## நெடுந்தீவிலும் விசேட திருப்பலி

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் கடந்த திங்களன்று நெடுந்தீவில் திருப்பலி வழிபாடுகள் நடைபெற்றன.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு நெடுந்தீவு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் நடைபெற்ற இந்த ஆத்மசாந்தி திருப்பலி வழிபாட்டில் கத்தோலிக்க மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திருப்பலி வழிபாட்டினை நெடுந்தீவுப் பங்குத் தந்தை எஸ்.செபநேசரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார்.

வழிபாட்டின் தொடக்கத்தில் இறந்து போன குழந்தைகள், சிறுவர்கள் இளைஞர்கள், யுவதிகள் தந்தையர்கள், தாய்மார்கள், முதியோர்கள் ஆகியோரை நினைவுகூரும் வகையில் நினைவு ஒளிகள் ஏற்றப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அன்றைய தினம் பிரதேச மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொண்டனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் நெடுந்தீவு கத்தோலிக்க மறை ஆசிரியர் சங்கத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

(எ-112)

## நாளை

நாளை
தை 16
29.01.2005
சனிக்கிழமை
திதி : சதுர்த்தி
முன் இரவு 10.11 வரை
நட்சத்திரம் : பூரம்
காலை 8.31 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 3.30 - 5.06
ராகுகாலம் : 9.36- 11.06
(யாவும் பழைய நேரப்படி)

## ஆற்றுப்படுத்தல் தொடர்பான வதிவிடப் பயிற்சிப் பட்டறை

சுனாமி அனர்த்தத்தின் காரணமாக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்துதல் தொடர்பான மூன்றுநாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை யாழ். பீச் இன் ஹோட்டல் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த வதிவிடப் பயிற்சிப்பட்டறை 'சீடா' நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச பயிற்சி மன்றத்தினால் ஆபத்துக்களும் ஈடுகொடுத்து வாழ்வினைக் கட்டி எழுப்புதல் என்னும் தொனிப்பொருளில் நடத்தப்படுகிறது.

இந்த உதவிப் பயிற்சிப் பட்டறையில் சுகவாழ்வு நிறுவனத்தின் உளவளப் பயிற்சியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச பயிற்சி மன்ற உளவள ஆலோசகர் திருமதி எஸ்.சண்முகம் இப் பயிற்சிநெறியில் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார். (10-190)

## உதயவாக்கு

இரவை இரவாகவும் பகலைப் பகலாகவும் செய் : நீ மகிழ்ச்சியுடன் வாழ்வாய். ஏதாவதொரு வேலையாவது செய்யப்படாமல் நாள் கழியக்கூடாது. - எம்.கிரீக்.

# அரசின் உதவி கிடைக்கவில்லை என்று வடக்கு - கிழக்கிலிருந்து முறைப்பாடு இல்லையாம்

## மறுப்புகிறார் அமைச்சர் பௌஸி

கொழும்பு,ஜன.28

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு அரசின் உதவிகள் கிடைக்கவில்லை என்று யாரும் முறைப்பாடு செய்யவில்லை - என்று கூறுகின்றார் அமைச்சர் பௌஸி.

சவூதி அரேபியாவின் செம்பிறைச் சங்கப் பிரதிநிதி கடந்த 25ஆம் திகதி கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது அவர் இப்படிக் கூறினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தான் நேரில சென்று பார்த்தபோது அரசின் உதவி கிடைக்கவில்லை என்று தமிழ்பேசும் மக்கள் தன்னிடம் முறையிடவில்லை என்றும் -

குறைபாடு இருந்திருந்தால் அங்கேயே கூறியிருப்பார்கள் என்றும் - அமைச்சர் பௌஸி மேலும கூறினார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் சவூதி அரேபியா முக்கிய இடத்தை வகிக்கின்றது. சவூதி அரேபியாவின் செம்பிறை நிறுவனத்தினர் பேரலை அனர்த்தத்தைப் பார்வையிட இங்கு வருகை தந்துள்ளனர்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதிகளும் - கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்கும் இவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். இவர்களுடன் சுற்றாடல் வனவளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியும் உடன் சென்றிருந்தார்.

சவூதி அரேபியப் பிரதிநிதிகள் வடபகுதிக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என்பது குறிபபிடத்தக்கது.

இப்பிரதேசங்களைப் பார்வையிட்டபின் சவூதி அரேபிய செம்பிறை அமைப்பின் பிரதிநிதி கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பௌஸி, முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், எம்.எச்.முஹம்மட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டவுடன் இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதரகம் உடனடியாக மனிதாபிமான உதவிகளைச் செய்தது என்றும் அடுத்தநாளே ஒரு கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான உலருணவு மற்றும் மருந்துவகைகள், கூடாரங்கள் என்பனவற்றை தமது நாடு அனுப்பிவைத்தது என்றும் சவூதிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுடைய செம்பிறை அமைப்பு ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான 30 கோடி 80 லட்சம் டொலர்களைச் சேகரித்து ஐ.நாவுக்கு வழங்கியுள்ளது.

ஒரே இரவில் 9 கோடி டொலர் பெறுமதியான பொருள்களை எம்மால் திரட்ட முடிந்தது. பெண்கள் தமது குழந்தைகளுடன் வந்து தங்க ஆபரணங்களையும், தங்கக் கட்டிகளையும் கூட நன்கொடையாக வழங்கினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்பதில் சவூதி மக்கள் பெரும் ஆர்வத்துடன் இருக்கின்றனர் - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செய்தியாளர்கள் அவர்களிடம் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தனர்.

உங்களுடைய மக்கள் பெருந்தன்மையுடனும், மனிதாபிமானத்துடனும் உதவிகளை, வாரி வழங்கியுள்ளனர். ஆனால், இந்த உதவிகள் ஆழியால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு கிடைக்கவில்லை. அப்பிரதேசத்தில் பிரேதங்கள் கூட இன்னும் முழுமையாக அகற்றப்படவில்லை. ஆனால, தென்பகுதியில் மீள்கட்டமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. எல்லா உதவிகளும், வளங்களும் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் பகுதிகளுக்கே கொண்டு சென்று குவிக்கப்படுகின்றன. தமிழ் பேசும் மக்கள் பட்டினியால் சாக வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அரச உதவிகள் எதுவுமே கிடைக்கவில்லை. ஏன் இந்த மாற்றான்தாய் மனப்பான்மை? என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

உடனடியாக அமைச்சர் பௌஸி இதனை மறுத்தார். "பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நான் நேரில் சென்று பார்த்தேன். எவரும் புகார் செய்யவில்லை. குறைபாடு இருந்தால் அங்கே கூறி இருப்பார்களே?" - என்றார்.

அதற்குப் பதிலளித்த அதே நிருபர், ஐயா நீங்கள் வந்தபோது நானும் அங்கே இருந்தேன். நானும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன். மக்கள தமது குறைகளைக் கூறவில்லை என்று கூறாதீர்கள். மக்களின் குரல் உங்களுக்குத் தான் கேட்கவில்லை அது தான் உண்மை - எனப் பதிலளித்தார்.

அப்படியா? அதனைப் பரிசீலனை செய்கின்றேன். ஜனாதிபதியிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்க ஆவனசெய்வேன் என்று சமாளித்தார் அமைச்சர் பௌஸி.

ஆனால், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப ஹக்கீமும், முன்னாள் அமைச்சர் எம்.எச்.முஹம்மதுவும் நிருபர்கள் சுட்டிக்காட்டிய விடயங்கள் அனைத்தும் உண்மைதான் என்றனர்.

நாங்கள் அப்பிரதேசங்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். எமது பிரதேச மக்களுககு அரசின் உதவிகள் எதுவுமே கிடைக்கவில்லை.

உண்மையை மூடி மறைக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களை மேலும் சித்திரவதை செய்யக் கூடாது. அரச உதவிகள் தமிழ் பேசும் மக்களுக்கும் பாகுபாடின்றிக் கிடைக்க ஆவன செய்யப்படவேண்டும் - என்று அவர்கள் வலியுறுத்தினர்.

(க-8)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1938 - 02 - 24



இறைவன் மடியில் 2003 - 01 - 21

### அமரர் கதிரித்தம்பி சின்னத்தம்பி

(காளிகோயில் பூசகர், சாவகச்சேரி)

திதி: 28.01.2005 திருதியை

ஈராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலாத அப்பாவே!
ஒளிவிளக்காய் கலங்கரை விளக்காய் ஒளிவீசி
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
ஆலவிருட்சமாய் குடும்பத்திற்கே நிழல் தந்த அன்புத் தெய்வமே!
அன்பு எனும் பாசவலைப் பின்னலில் சிக்கி
எம்மைத் தவிக்க விட்டுச்சென்ற பாசமலரே அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
மனைவி, மகன் (பிரான்ஸ்),
மருமகள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

அல்லாரை வடக்கு,
சாவகச்சேரி. (41371)(42-18)


## அடிக்கல் நடுகை தினம்

யாழ்ப்பாணம்,ஜன.28

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா மேற்படி கல்லூரிக்கு அடிக்கல் நடுகை செய்த தினத்தையொட்டிய நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி காலை 8.45 மணிக்குக் கல்லூயின் ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய சேவைக்கால ஆலோசகரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய செ.விஸ்வலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

(10-202)

## ஆத்மீக சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி,ஜன.28

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் ஜனவரி மாத இதழ வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், மதிப்பீட்டுரையை நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவார்கள்.

(10-202-173)


## உளமார வாழ்த்துகின்றோம்



இல்லற வாழ்வில் இன்று வெள்ளிவிழாக் காணும்
தம்பதிகள்

### சிவகாந்தா - தேவி

இன்னும் பல சீரும்சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ
உளமார வாழ்த்துகின்றோம்.

மருமகன், மகள்,
பேரப்பிள்ளைகள்:
ஐது, அஸ்விந்.

V.C.லேன்,
சங்கானை. (41369(39-18-42)



நெடுந்தீவு நெடுவினி சித்தி விநாயகனே நம

## நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் நாகமுத்து சங்கரப்பிள்ளை (J.P.)

(இளைப்பாறிய அதிபர்,
முன்னாள் தலைவர் - நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம்)

பூவுலகு: 08.04.1934

விண்ணுலகு: 09.02.2004

திதி : திருதியை (28.01.2005)

"நல்லதொரு ஆசான்
நல்லதொரு நண்பன்
நல்லதொரு சமூக சேவையாளன்
நல்லதொரு பல்சமயத் தொண்டன்
நல்லதொரு கூட்டுறவாளன்
நல்லதொரு கலைஞன்
நல்லதொரு ரசிகன்
நல்லதொரு அரசியலாளர்
நல்லதொரு சமாதான விரும்பி
நல்லதொரு விருந்தோம்பல் மனம் உடையோன்
நல்லதொரு மண்ணின் மைந்தன்"

எனப் பலராலும் புகழப்பட்ட எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

-மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(41366) உதயன் Graphics



## கலைவாணி

கல்வி நிறுவனம்
கோப்பாய்
ENGLISH MEDIUM
தரம் 6,7,8.
ஆரம்பம்:01.02.2005 பிற்பகல் 3.45
(சி-40675)



அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
தமிழ்
M.சுரேஸ் B.A.(HONS) TA.SPECIAL
A/L 2006,2005 Paper Class
இலக்கணம்
ஈழத்து இலக்கிய வரலாறு
சனி, ஞாயிறு 11.30 மணி
G.A.Q, B.A.யாழ்.பேராதனை
ஆரம்பம்:29.01.2005 8.00 a .m.
DEGREE COLLEGE OF HIGHER STUDIES
342.ஸ்ரான்லி வீதி. ஆரியகுளம் சந்தி அருகில்.
நியூட்டன். யாழ். நகர்.



## திருமணக் கார்

* இச்சேவையை ஒழுங்குசெய்யும் விடுதிகளுக்கும தொலைத்தொடர்பு நிலையங்களுக்கும் கமிஷன் வழங்கப்படும்.
* குளிரூட்டப்பட்ட சொகுசுக்கார், சில்வர்நிறம்
* திருமண சேவைக்கும்
* முக்கிய பிரமுகரின் (VIP) பயன்பாட்டிற்கும் மட்டும் உரியது. (வரையறுக்கப்பட்ட தூரங்களிற்கு)

தொடர்பு: தொ.பே.இல. 222 6286
0777 283795

(மேற்படி இலக்கங்களைக் குறித்து வையுங்கள்)
(41253)(26-18-42)

# புலிகள் சிறந்த நிர்வாகத் திறமையுடையவர்கள் என்பதை அவர்களுக்கு எதிரானவர்கள் கூட ஏற்றுக்கொண்டுள்ளனர்

## சுனாமி இதற்கு வாய்ப்பளித்துள்ளது என்கிறார் முன்னாள் எம்.பி. வேலாயுதம்



யாழ்ப்பாணம்,ஜன.28

தமிழீழ விடுதலைப் புலிகள் மிகச்சிறந்த நிர்வாகத் திறமையுடையவர்கள் என்பதைப் புலிகளுக்கு எதிரானவர்கள் கூட இப்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதற்கான வாய்ப்பை சுனாமி அனர்த்தம் ஏற்படுத்தியுள்ளது.

-இவ்வாறு தெரிவித்தார் ஊவா மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. வேலாயுதம்.

'சுனாமி' அனர்த்தம் தொடர்பாக வடபகுதியின் நிலைமைகளை அவதானித்து உதவித் திட்டங்களை வகுப்பதற்காக கே.வேலாயுதம் தலைமையிலான ஒரு குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இக்குழுவினர் தமது விஜயத்தின் நோக்கம் பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை கடந்த 25ஆம் திகதி இரவு 'உதயன்' விருந்தினர் விடுதியில் நடத்தினர்.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த கே.வேலாயுதம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"சுனாமி" அனர்த்தம் எமது மக்களின் உயிர், உடைமைகளைக் காவு கொண்டுள்ளது. இந்த ரீதியில் சர்வதேச மட்டத்தில் பல நாடுகள் இம்மக்களுக்கு உதவி செய்ய முன்வந்திருக்கின்றன. எனவே, தொழிற்சங்கம் என்ற ரீதியில் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் எமக்கும் ஒரு கடப்பாடு உள்ளது.

இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு அமைப்பு ரீதியாக, தொழிற்சங்க அமைப்புக்குள் உட்பட்ட தொழிலாளர்கள் பற்றிய விவரங்களை அறிந்து, எங்களது சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் ஒத்துழைப்போடு இங்குள்ள தொழிற்சங்கங்களூடாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய மனிதாபிமான உதவிகளையும் புனருத்தாரண வசதிகளையும் செய்வதற்கு ஏற்பாடு செய்துவருகிறோம்.

அமெரிக்க சுதந்திர தொழிலாளர்களின் ஒன்றுகூடலுக்கான இலங்கை மையத்தின் ஊடாக அதனுடன் இணைந்த பல தொழிற்சங்கங்களுடன் பலமுறை இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

இக்கலந்துரையாடலில் சர்வதேச ரீதியான தொழிற்சங்கங்கள் எம்மிடம் சில விடயங்களை முன்வைத்தன. அதாவது எமது நாட்டில் உள்ள சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு துறைகளிலே தொழில் புரிகின்ற தொழிலாளர் பற்றிய விவரங்களையும் அவர்களின் குடும்பங்கள் பற்றிய விவரங்களையும் உடனடியாகச் சேகரித்துத் தரும்படி எம்மிடம் கேட்டன.

இதற்கமைவாகவே நாம் எமது பிரதிநிதிக் குழுக்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம. ஒவ்வொரு இடங்களிலும் உள்ள தொழிற்சங்க இயக்கங்களுடன் இணைந்து தகவல்களைச் சேகரிக்கும் பணியில் எமது குழுப் பிரதிநிதிகள் ஈடுபடுவர்.

அந்தவகையில் ஒரு குழுவினர் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். இன்னொரு குழுவினர் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். நாங்கள் மூவர் வடபகுதிக்கு வந்துள்ளோம்.

ஆனால் எமது விஜயத்தின் நோக்கம் தொழிலாளர்களின் பாதிப்புக்களை மாத்திரம் தெரிந்துகொண்டு செல்வதல்ல. அதிகளவில் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் நேரடியாகப் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்தவர்கள். எனவே அவர்கள் பற்றிய விவரங்களையும் அறிந்து கொள்வதே தொழிற்சங்கத்தின் கடப்பாடு.

தொழிற்சங்கத்தின் ஒற்றுமையைக் காட்டுவதற்காக நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்துள்ளோம். இங்கு தொழிற்சங்க, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச உதவி வழங்கும் அமைப்புக்களோடு கலந்துரையாடி இங்கு ஏற்பட்டுள்ள சேதவிவரங்கள் அனைத்தையும் கேட்டறிந்துள்ளோம்.

தற்போது பாதிப்புக்கள் அதிகம் ஏற்பட்ட பகுதிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுடனும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடனும் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். பல குடும்பங்களைப பொருளாதார ரீதியில் இப்பேரழிவு பாதித்துள்ளதுடன் மாணவர்களையும் உடல், உளரீதியாகப் பாதித்துள்ளது என்பதை நேரடியாகக் காண முடிந்தது. பல பெற்றோர்கள் எதிர்காலத்தைப் பற்றிய கேள்விக்குறிக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 800 மீன்பிடிப் படகுகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன என்பது மீன்பிடித் தொழிலாளர்களின் அமைப்புக்களின்மூலம் எமக்கு தெரியவந்தது. படகுகள் திருத்தப்படாதவிடத்து அவர்கள் மீன்பிடிக்கச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் மீன்பிடித் தொழில் ஒரு சாவலை எதிர்கொண்டுள்ளது. ஊடகங்களில் வெளியான தவறான தகவல்களாலும் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்துள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது. இது தொடர்பாகவும் நாம் தகவல்களைத் திரட்டியுள்ளோம்.

நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினோம். அவர்களிடம் இருக்கின்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது, அரசிடம் இருக்கின்ற திட்டங்களைவிட மிகவும் தெளிவான முறையில் கால அட்டவணையுடன் தயாரித்துள்ளனர். அவர்களால் சரியான முறையில் புள்ளி விவரங்களை எமக்குத்தர முடிந்தது.

இன்னொரு விடயத்தை நாங்கள் அவர்களின் மூலமாக அறிந்துகொள்ள முடிந்தது. அதாவது கற்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், விதவைகள் போன்ற தரப்பினர் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களுடைய சுகாதாரம், ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான போஷாக்கு உணவு போன்றவை சமமாக வழங்கப்படவேண்டிய கட்டாயத் தேவைபற்றி அங்கு உணர்த்தப்பட்டது.

அடுத்து வன்னிக்குச் செல்லவுள்ளோம். அங்கும் திரட்டப்படுகின்ற தகவல்கள், ஏற்கனவே நாம் திரட்டியுள்ள தகவல்களுடன் கொழும்பு சென்று அத்தகவல்கள் சர்வதேச தொழிற்சங்க அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலமாகப் பெறப்படுகின்ற உதவித்திட்டங்களை இங்குள்ள தொழிற்சங்க அமைப்புக்களினூடாக அல்லது பொது நிர்வாக அமைப்புக்களினூடாக அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதே எமது உண்மையான நோக்கம் - என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஆடைத் தொழிலாளர்களின் மத்திய நலன்புரி நிலைய இணைப்பாளர் திருமதி எஸ்.புஸ்பராணி, சர்வதேச தகவல் பரிமாற்று நிறுவக ஆசியப் பிராந்திய இணைப்பாளர் பற்றீசியா லோட் இறையன், தமிழர் ஆசிரியர் சங்கத் துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (8-12)

# துறவிகளுக்கெல்லாம் மூலகர்த்தா தூய அன்னையான ஸ்ரீ சாரதாதேவி

**தூய** அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஜெயந்தி விழா கடந்த மூன்றாம் திகதி திங்கட்கிழமை இந்தியா, இலங்கை உட்பட உலகெங்குமுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிசன்கள், ஸ்ரீசாரதா ஆச்சிரமங்கள், ஸ்ரீ விவேகானந்தர் ஆச்சிரமங்களால் கொண்டாடப்பட்டன.

தூய அன்னையர் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியும், அவருடைய முதல் சிஷ்யையும் ஆவார். குருதேவரின் ஆன்மீக வாழ்க்கையுடனும், உலக மக்களை உய்விக்கும் பொருட்டு அவர் வழங்கிய உபதேசங்களுடனும் பின்னிப்பிணைக்கப்பட்டவர் அன்னையார். இந்தியாவின் கல்கத்தாவில் ஜெயராம்பாடி என்ற கிராமத்தில் ஏழைப்பிராமணக் குடும்பத்தில் 22.12.1853இல் இவர் அவதரித்தார். கடந்த 2003ஆம் ஆண்டு அன்னையாரின் 150ஆவது ஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



சென்ற ஆண்டும் அன்னையின் யுகமென இந்தியாவிலும், இலங்கையிலும் அன்னையின் ரதபவனி உட்பட பல சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன; நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பிற்பட்ட கிராமப்புறத்தில் ஏழைக்குடும்பத்தில் அவதரித்ததால் இவர் பள்ளி சென்று படித்ததில்லை. பிற்காலத்தில் சொந்த முயற்சியால் சிறிதளவு கற்றுக்கொண்டார். ஆனால் பெற்றோருக்கு உதவி செய்தல், வீட்டுப் பொறுப்புகளில் பங்கெடுத்தல், எளிமையான வாழ்க்கை, பிற்பாடு கிடைத்த சாதுசங்கம் போன்றன ஒப்பற்ற அன்னையாக உருவெடுக்க அடிப்படைக் காரணிகளாக அமைந்தன.

அன்னையின் திருமணவாழ்வு தெய்வசங்கர்ப்பமானதும், உலகிற்கு ஒப்பற்ற பாடத்தைப் புகட்டுவதுமாகும். தெய்வப் பித்துப்பிடித்த குருதேவரிற்கு மணமுடித்து வைக்க விரும்பியலைந்த பெற்றோருக்கு, ஜெயராம்பாடியில் எனது வாழ்க்கைத் துணையானவள் இருக்கிறாள் என இனங்காட்டினார். அது போலவே பொதுவிழா ஒன்றில் குழந்தையான சாரதையை ஒரு பெண்மணி "நீ யாரை மணம் செய்வாய்?" என்று கேட்டபோது அவர் அங்கு இருந்த குருதேவரைச் சுட்டிக்காட்டினாள்.

இருபத்து மூன்று வயதான சுதாகரருக்கும் ஐந்து வயதான சாரதைக்கும் திருமணம் நிகழந்தது. சாரதை பெரியவளாகியபோது மிக நீண்ட கூந்தலுடன் அழகில் மிக நிகரற்று விளங்கினாள். ஆனால் அவதார புருசரான குருதேவரிற்கும் அன்னைக்குமிடையில் எதுவித தாம்பத்திய உறவும் நிகழ்ந்ததில்லை. குருதேவர் தான் இந்த நிலைக்கு உயர்வதற்கு அன்னையே காரணம் என்கிறார். அவள் மட்டும் சாதாரண பெண்போல உடல் இச்சையிலிருந்து உலக ஆசைகளை எதிர்பார்த்திருந்தால் கணவன் என்ற முறையில் தனது கடமையைச் செய்திருக்க வேண்டியவராகி சாதாரண மானுட வாழ்க்கையையே வாழ்ந்திருக்கவேண்டியிருக்கும் என்று கூறுகிறார்.

குருதேவரிடம் "உங்கள் ஆன்மீக வாழ்வில் பங்கெடுத்து அதற்காக அர்ப்பணிக்கவே விரும்புவதாக" எந்தப் பெண்ணுமே கூறமுடியாத விடையைக் கூறி அதன்படி வாழ்ந்து காட்டினார். சிவமும் சக்தியுமாக, இராமரும் சீதையுமாக வாழ்ந்து காட்டினார்கள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பதுபோல குருதேவர் சோடசி பூசையில் பீடத்தில் அன்னையாரை அமர்த்தித் துதித்ததன் மூலம் அவரை ஆதிபராசக்தியின் அம்சம் என உலகுக்கு உணர்த்தினார். உலகின் உயிர்களின் உற்பத்தி மூலமாகவும் ஆணின் சரி பாதியாகவும் வாழ்வில் அமையும் பெண்மையை எப்படிப் போற்றி மதிக்கவேண்டும் என்ற செய்தியாகவும் அது அமைந்தது.

சி.சிவமோகன்
ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கம், (இலங்கை), தாவடி.

குருதேவர் தனது மறைவின்போது தனது தூல சரீரமான உடலே மறைகிறது, தான் சூக்கும உடலுடன் பிரம்ம மயமாக இருந்து அன்னையையும் சீடர்களையும் பக்தர்களையும் காப்பேன் என்று அன்னைக்கு உணர்த்தி அவரை சுமங்கலிக் கோலத்தில் வாழப் பணித்தார். அன்னையும் குருதேவர் காட்டிய வழியில் எளிமையாகவும், அனைவருக்கும் சிறந்த முன்னுதாரணமாகவும் கடைசிவரை வாழ்ந்து காட்டினார்.

சுவாமி விவேகானந்தர்கூட குருதேவரிற்கு மேலாகத்தான் அன்னையை மதிப்பதாகக் கூறினார். "பெண்களை மதிக்காத எந்த நாடும் முன்னேற்றமே அடையமுடியாது" - என்கிறார். வீரத்துறவியாக சுவாமி விவேகானந்தரை உலகிற்கு இனங்காட்டிய சிக்காக்கோ மாநாட்டிற்கே அன்னைதான் ஆசீர்வதித்து வழியனுப்பிவைத்தார். இன்று உலகெங்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் அரும்பணியாற்றுகின்றன, எத்தனை துறவிகள் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான மூலகர்த்தாவே அன்னையார்தான்.

குருதேவர் மறைவின் பின்னர் சீடர்கள் இருக்க இடமில்லாதும், உணவிற்காகப் பிச்சை ஏற்கும் நிலையையும் பார்த்துக் குருதேவரிடம், "உங்களை நம்பி வந்தவர்களுக்கு இப்படி ஒரு நிலையில்லாது நல்வழிகாட்டுங்கள்!" என்று வேண்டி, சுவாமி விவேகானந்தருக்கு அறிவுரை கொடுத்து நிலையான மடங்களும், துறவிகளுக்கு அங்கே உணவுபெறும் நிலையையும் ஏற்படுத்தி அவர்கள் அன்றும் இன்றும் என்றும் மிக உயர்ந்த ஆன்மீகப் பணியாற்றும் நிலையை ஏற்படுத்தினார்.

குருதேவரைப் போலவே ஒப்பற்ற சக்திகளைப் பெற்றிருந்தும் சித்துக்கள், அற்புதங்




கள் என்று மக்களைப் பிழையான கற்பிதங்களில் மயக்கமுற வைக்காவண்ணம், சாதாரண குடும்ப பெண்மணிபோன்றும் அதேவேளை உயர்ந்த ஆன்மீகக் குருவாகவும் வாழ்ந்து காட்டினார். சிவப்புக்கரையுடனான வெள்ளைப் புடைவையே அணிவார். ஆன்மீக சாதனையில் நாமஸ்பரணம் மிகவும் அத்தியாவசியமானது எனக் கூறும் அன்னையார், பெண்கள் குடும்பக் கடமைகளை விலக்கமுடியாது, தியானம் வழிபாடு செய்வதற்கு நேரமும் போதாது. எனவே தினசரிக் கடமைகளைச் செய்யும் போதேதான் லட்சம் தடவைகள் இறைநாம உச் சாடனம் செய்வதாகக் கூறுகிறார். இதைநாமும் கடைப்பிடிக்கலாமல்லவா!

கணவனுக்குச் சிறந்த மனைவியாக, பெற்றோருக்கு சிறந்த மூத்த மகளாக, சகோதரர்களுக்கு சிறந்த மூத்த சகோதாரியென்ற பொறுப்புணர்வுடனும் சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் சிறந்த ஆன்மீகக் குருவாக, பெண்களுக்குச் சிறந்ததோர் முன்னுதாரணமான இந்துப் பெண்மணியாக எமக்கெல்லாம் தூய அன்னையாக அவரது வாழ்க்கை அனைவருக்கும் ஒரு பாடமாக அமைகிறது.

குருதேவரைப் போலவே முஸ்லிம், கிறிஸ்தவர்களும் அன்னையைப் போற்றி வழிபட்டார்கள். அமெரிக்கா உட்படப் பல இடங்களில் அன்னையைத் தெரியாதவர்களே அன்னையின் படம் கிடைத்தபோது தெய்வமாகப் போற்றிய வரலாறுகள் உண்டு. ஏழைகளுக்கும் அநாதரவானவர்களுக்கும் அவர் உயர்ந்த சேவையாற்றினார். ஏழைகளின் மலகூடங்களைத் தனது நீண்ட கூந்தலால் சுத்தம் செய்த ஒப்பற்ற சம்பவங்களும் நடந்துள்ளன. ஒரு கட்டுரை மூலம் கூறி முடித்துவிடக் கூடியதல்ல தூய அன்னையின் ஒப்பற்ற வாழ்க்கைச் சரிதம்.

கடற்பெருக்கு பேரனர்த்தத்தில் மரணமடைந்த உயிர்களின் ஆத்மசாந்திக்கும் வீடுவாசல்கள், உடைமைகள் உறவுகளை இழந்து தவிக்கும் உள்ளங்கள் அனைவருக்கும் அன்னையின் பேரால் பிரார்த்திப்போமாக. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நல்லாசிகள் அனைவருக்கும் கிட்டுவதாக.★



வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயிலில் நடைபெற்ற சிவஸ்ரீ இ.திருக்குமரக்குருக்களின் குருப் பாட்டாபிஷேகத்தினை (ஆச்சாரியாபிஷேகம்) வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குருவான சிவாச்சாரிய பீடாதிபதி சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)



அமரர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (கஞ்சாத்தையா) நினைவாக அவரது அந்தியேட்டித் தினத்தன்று அவரது நண்பரான காரைநகரைச் சேர்ந்த தொழிலதிபர் கணேசனால் வியாவில் ஐயனார் ஆலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அந்தச் சாதனங்களை காயத்திரி சுவாமிகள் இயக்கி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## மருதமுனை வீட்டில் புதனன்று நில அதிர்வு?

மருதமுனை அக்பர் வீதியில் உள்ள வீடொன்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் நிலத்துக்கு அடியில் சூடு வெப்பம் கிளம்புவது பற்றியும் -

அவ்விடத்தில் வெட்டிய குழியில் சூடான நீர் குமிழிகளுடன் வெளிபட்டது பற்றியும் -

கடந்த சில தினங்களாகப் பரபரப்புச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இந்த வீடு அமைந்துள்ள காணியில் திடீரென சிறு நிலஅதிர்வு ஒன்று ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலஅதிர்வால் வீட்டிலிருந்த பொருள்கள் வீழ்ந்து உருண்டுள்ளன எனவும் -

இது குறித்து விசேட அதிரடிப்படையினரின் கவனத்துக்கு கொண்டு வந்தபோது அவர்கள் நேரில் வந்து அவ்வீட்டைப் பார்வையிட்டு சென்றனர் எனவும் - தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற மக்கள் பெருமளவில்கூடி இந்த வீட்டை வந்து பார்வையிட்டுள்ளனர். அப்பகுதி மக்கள் மத்தியில் இவ்விவகாரம் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

பஸீர் என்பவரது வீட்டிலேயே இந்த விநோதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (க-3)

## சவூதி செம்பிறைச்சங்கம் 1,000 வீடுகள் அமைக்கும்

கொழும்பு,ஜன.28

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு சவூதி செம்பிறைச சங்கம் ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும். இலங்கை அரசு அதற்கான காணிகளை அடையாளம் காட்டியபின் வீடமைப்புப்பணிகள் ஆரமபிக்கப்படும் என செம்பிறை அமைப்பின் தலைவர் டாக்டர் அப்துல் ரஹுமான் கூறினார். ஆழிப பேரலை அனர்த்தப் பிரதேசங்கள் சிலவற்றை நேரடியாகப் பார்வையிட்டபின் செய்தியாளர்களைச் சந்தித்து செம்பிறை அமைப்பின் நிவாரணப் பணிகள் தொடர்பாக டாக்டர் ரஹுமான் விளக்கமளித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் அமைத்துக்கொடுக்கும் வீடுகள் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல, சகல இனத்தவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசும, மக்களும் பெருமளவிலான மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளனர். நாம் இங்கு வந்து, ஏறபட்ட பாதிப்புகள் தொடர்பாக மதிப்பீடுகளைச் செய்துள்ளோம். பல ஆயிரக்கணக்கான மீனவாகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மீளக்கட்டியெழுப்ப சவூதி அரேபியா உதவ முன்வந்துள்ளது. இன, மத பாகுபாடின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். மீனவர்களுக்கான மீன்பிடிப்படகுகளும், ஏனைய உபகரணங்களும் பெற்றுக்கொடுக்கப்படும். கட்டிக்கொடுக்கப்படும் வீடுகள ஒரே இடத்தில் அமையாமல் பரவலாக வெவ்வேறு பிரதேசங்களில் அமைக்கப்படும். (எ-க)

## பாடசாலையில் கடற்படையினர் சிரமதானம்

கடந்த வாரம் மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் அங்குள்ள மகாவித்தியாலயத்தில் சிரமதானப்பணியில் ஈடுபட்டுள்ளனர். விடுமுறைக் காலத்தில் அங்கு வளர்ந்திருந்த பற்றைகள், செடிகளை அகற்றியதுடன் பாடசாலை வளாகத்தைத் துப்பரவு செய்துள்ளனர். இந்தப் பணியில் பொதுசனத் தொடர்பதிகாரியும் 50 இற்கு மேற்பட்ட கடற்படையினரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-88)


இலவச அழகுக் கலை கருத்தரங்கு

(மானிப்பாய் றோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையுடன்)

CELEBRATE ROTARY

இடம் : மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி

காலம் : 29.01.2005 சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை



ஆசிரியர் திருமதி B.அகிலா

(Moon Beauty Centre, Colombo பிரபல நடன ஆசிரியையும்).

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை :

RTR பியூட்டி சென்ரர்

பிரதான வீதி, மானிப்பாய். Tel:0777 677079

அழகுக் கலை, தையல், பூ, கேக் போன்ற வகுப்புகள் அனைத்தும் 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகும்.

(41347)



## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஓட்டுமடம், இல.611, மானிப்பாய் வீதி, கணேசபிள்ளை சண்முகலிங்கம் ஆகிய நான் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, முஸ்லிம் வட்டாரம், இல.38, கலீபா அப்துல் கமீது வீதியைச் சேர்ந்த, அப்துல் கரீம் நிஜாம் மொகிதீன் என்பவருக்குச் சொந்தமானதென வெளிப்படுத்தல் உறுதிமூலம் வெளிப்படுத்தியுள்ளதும் அராலி வீதியில் அமைந்துள்ளதுமான வயற்காணி வண். மேற்கிறை, "இராசாளிக் குளம் கரை வயல்" நெற் பர.14 குழி 10.96 என்ற காணியை அவரிடமிருந்து விலைக்கு வாங்க எண்ணியுள்ளேன். அதனை வாங்குவதற்கு முன் அக்காணியில் வேறுயாருக்காயினும் உரித்துடந்தை, சோந்தை என்பன இருந்தால் அவர்கள் அதனை எனக்கு இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அறியத் தருமாறு வேண்டுகிறேன்.

தொலைபேசி இல. 6813.

குறித்த விற்பனவுகாரனிடம்
வெளிப்படுத்தல் உறுதி ஒன்று உண்டு.

ச.தங்கமாமயிலோன்,
பிரசித்த நொத்தாரிஸ்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

க.சண்முகலிங்கம்,
சமூக சேவை அலுவலர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.

(41349)(26-18-42)



பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பழயுங்கள்

## பிருந்தாவன் கல்லூரி

(முன்னர் தேசிய முதல் நிலைக்கல்லூரி)
அரசினால் அங்கீகரிக்கப்பட்டு பெங்களூர்
பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.
2ஆம் குறுக்கு, பூப்பசந்திரா, R.M.V. Extn. 2nd Stage
பெங்களூர் 94 இந்தியா
E.Mail - info @ brindavan College .Com/ enquiry @ brindavan College .Com www brindavan College .Com

இலவசக் கருத்தரங்கு மற்றும் உடன் உள்வாங்கல்
கொழும்பு ஹில்டன், கொழும்பு.
சனிக்கிழமை 29-01-2005 மு.ப. 9.30 மணிக்கு கருத்தரங்கின் பின்னர்
உடன் உள்வாங்கல் மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை
(அதிபர்/நிர்வாக நம்பிக்கையாளர்)

| | |
|---|---|
| ☆ B.Sc. நுண் உயிரியல் ☆ உயிரியல் தொழில்நுட்பம் ☆ மரபியல் கணனி விஞ்ஞானம் | ☆ B.C.A. ☆ B.Com. ☆ B.B.M. |
| ☆ M.Sc.உயிரியல் தொழில்நுட்பம் ☆ நுண் உயிரியல் ☆ பிரயோக மரபியல் | ☆ M.C.A. ☆ M.B.A. |

- சிறிலங்கா மாணவர்கள் 270 பேருக்கு மேற்பட்டவர்கள் தற்பொழுது 42 தேசியங்களைச் சேர்ந்தவர்களுடன் கற்றுவருகின்றார்கள்.
- கருத்தரங்கின்போது ஒதுக்கீடுபெறும் மாணவர்களுக்குக் கழிவுகளும் தவணைத் திட்டங்களும் உண்டு.
- 2005 இல் A/L பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்கள் பெறுபேறுகள் வரும்வரை ஒதுக்கீடு பெறமுடியும்.
- இக்கல்லூரியிலிருந்து ஏற்கனவே 350இற்கும் மேற்பட்ட சிறிலங்கா மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளார்கள்.
- ஒதுக்கீட்டுக் கட்டணம் அமெரிக்க $ 400/ அல்லது அதற்குச் சமமான தொகை.

* பதிவுக்கட்டணமின்றியே மாணவர்கள் ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளலாம்.

Company Secretarial Services (Pvt) Ltd
#285C - 1/1, Stanley Tillakratne Mw,
Jubilee post, Nugegoda.
Tel: 011 - 2854438/0777 - 387273
E Mail: yapadd @sol.lk (26-18-42) (சி-40654)

Further details:
Mr. Gunawardena
011 - 2811524
Mr. Gunasekera
02232657, 0382232657





உ
ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் தை மாதம் 16 ஆம் நாள் (29.01.2005) சனிக்கிழமை காலை 7.36 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள கும்ப லக்கினமும் பூர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்தத்தில்

மணமகன் எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**விஸ்ணுகுமார்**
அவர்களுக்கும்



மணமகள் எமது புதல்வி
திருவளர் செல்வி
**கமலினி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் கருணையினால் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்திலுள்ள மாரியம்மன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடைபெறத் திருவருள் கைகூடியிருப்பதனால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அன்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு

அன்புடன் அழைக்கின்றோம்.

- இருவீட்டார் அழைப்பு -

*இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*
*தங்கள் நல்வரவை நாடும்*

வரவேற்பாளர்:
திரு.திருமதி சு.பாலச்சந்திரன் (ஸ்ரீ)
(ஸ்ரீந்திகை).

வரவேற்பாளர்:
திரு.திருமதி கந்தையா செல்லத்துரை குடும்பத்தினர்,
திருமதி தயாளன் கமலேஸ்வரி
25/8, அரசடி ஒழுங்கை, வண்.வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
திருமதி வே.பரமானந்தம்
18/5, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
முதலாம் ஒழுங்கை,
சூசையப்பர் வீதி, 10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(41291)


## மஞ்சம் வழங்கப்பட்டது

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தானத்திற்கு அவ்வூர் முத்துராஜா குடும்பத்தவர்களினால் நவீன வடிவிலான 'மஞ்சம்' ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தைப்பூசத்தினத்தன்று வழங்கப்பட்ட மஞசம் அன்று மாலை 4 மணிக்கு வெள்ளோடடம் விடப்பட்டது.

அதனை தொடர்ந்து அன்று இரவு 8 மணியளவில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெயவானை சமேதரருடன் தைப்பூச நன்நாளில் வீதியுலாவந்தார். (8-185)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்.டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 10 - 1925



மறைவு 29 - 12 - 2004

18 - 03 - 1974



தோற்றம் 14 - 11 - 1925

**இளையதம்பி நடராசா** **திருமதி நடராசா பொன்னம்மா**

நெஞ்சில் நிலைத்துவிட்ட 'எந்தையும் தாயும்' அமரர்கள்

உயிரூட்டி, உணவூட்டி, அன்பூட்டி, அறிவூட்டி
எல்லாந்தந்து இப்போது எமையெலாந் தவிக்கவிட்டு
இல்லாமற் போய்விட்டீர்களே! அதனால் ஏங்குகிறோம்!!
உங்கள் நினைவுகள் வந்து, வந்து எம்மை வாட்டுகின்றன!
ஆனால் உங்கள் உபதேசங்கள், அறிவுரைகள் எங்களுக்கு
என்றென்றும் வழிகாட்டுகின்றன! அறிவூட்டுகின்றன!

26-12-2004 அன்று சுனாமிப் பேரலையால் உயிர் நீத்த எங்கள் குடும்பத்தலைவர் இ.நடராசா அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (28-01-2005) வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"இராணிமகால்"
47,நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.


—குடும்பத்தினர்.

(41333)(46-18-42)

# ஆயிரமாயிரம் சடலங்களின் மீது நின்றுகொண்டு அரசியல் தர்பார் நடத்த முயல்கிறார் ஜனாதிபதி

## உதயனுக்கு அளித்த செவ்வியில் சந்திரசேகரன் குற்றச்சாட்டு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தேசத்துக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஆட்சியில் எவர் இருந்தாலும் அவர்களைச் சார்ந்ததுதான். அது ஜனாதிபதியின் பொறுப்போ, ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்போ அல்ல. நிவாரணப் பணிகளைக் காரணங்காட்டித் தேர்தல்களை ஒத்திவைப்பது என்பது அழிக்கப்பட்ட



ஆயிரக்கணக்கான உடல்களின் மீது நின்று தனது அரசியல் லாபத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சி ஆகும்.

இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர் உதயனுக்கு சிறப்புப் பேட்டி அளித்தார்.

அதன் விவரம் வருமாறு:-

*கேள்வி:* ஜனாதிபதி ஐந்து வருடங்களுக்கு தேர்தலைப் பற்றி சிந்திக்கக் கூடாது எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

*பதில்:* சுனாமி அனர்த்தத்தினால் முழு நாட்டு மக்களும் மிகப்பெரும் பாதிப்படைந்திருக்கும் இந்நிலையில் அவர்களுக்குரிய நிவாரணத்தை வழங்க வேண்டிய கடமை இலங்கை அரசுக்குண்டு. இது ஜனாதிபதியின் பொறுப்போ அல்லது ரணிலின் பொறுப்போ அல்ல. யார் ஆட்சிக்கு வந்தாலும் இதனைச் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்குண்டு. ஆகவே, தேர்தல்களை ஒத்திப்போடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

சுனாமி அனர்த்தப் பாதிப்பைக் கையாளும் அதேவேளை, தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு, சமாதானப் பேச்சுக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வழங்க வேண்டுமோ அதேபோல் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் ஜனாதிபதிக்கு உள்ளது.

தேர்தல்களை ஒத்திவைப்பதென்பது அழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உடல்களின் மீது நின்று தனது அரசியல் லாபத்தை தக்கவைத்துக் கொள்ளும் முயற்சி. இதை ஒரு கேவலமான நடவடிக்கையாகவே நான் கருதுகிறேன்.

*கேள்வி:* கிழக்கு மாகாணத்திற்கு சுனாமி நிவாரண உதவிகள் ஒழுங்காகப் போய்ச் சேரவில்லை என கூறப்படுகிறது இது பற்றி.

*பதில்:* வடக்கிற்கு எப்படி உதவிகள் வந்து சேரவில்லையோ அதுபோல் கிழக்கு மாகாணத்திற்கும் அந்த உதவிகள் போய்ச்சேராதது நாளுக்கு நாள் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. அங்கும் அரசியல் லாபம்தேடும் முயற்சிகள்தான் நடந்துகொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அங்குள்ள பிரதேசங்களில் சிங்களப் பிரதேசம், ஹக்கீமின் செல்வாக்கிற்குட்பட்ட பிரதேசம், பேரியல் அஷ்ரப்பின் செல்வாக்கிற்குட்பட்ட பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என பிரிக்கப்பட்டு இனப் பாரபட்சம் காட்டப்படுவது சந்தேகத்துக்கு இடமின்றி காணப்படுகிறது.

*கேள்வி:* சுனாமி நிவாரணப்பணிகளில் தமிழ்ப்பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதுபற்றி.....

*பதில்:* தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தியை அரசு கடந்த ஐம்பது வருடகாலமாகவே புறக்கணித்து வருகிறது.

இந்த நேரத்திலும் அதேவித செயற்பாட்டைத் தொடர்வது தமிழ்மக்களைத் தங்கள் எதிரிகளாக தேசியக்கட்சிகள் கருதுவதை புரிந்து கொள்ள முடிகிறது.

*கேள்வி:* நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதால் இனவாதிகளால் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுவதுண்டா?

*பதில்:* தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்பு வைத்திருப்பது மட்டுமல்ல நாங்கள் புலி ஆதரவு நிலைப்பாட்டிலிருப்பதாலும் எதிர்காலத்தில் பல அரச சவால்களை சந்திக்க நேரலாம். ஆனாலும் அதற்கெதிராக எதிர்நீச்சல்போட வேண்டிய அவசியம் மலையக இளைஞர்களுக்கும் மலையக சமூகத்திற்கும் உள்ளது. எனவே, எமது அரசியல் நிலைப்பாட்டிலிருந்து நாங்கள் நகரப் போவதில்லை. எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராகி வருகிறோம்.

*கேள்வி:* சுனாமி தாக்குதல் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு ஒரு உந்து சக்தியாக அமையும் என்பது மக்களின் பொதுவான கருத்தாக உள்ளது. இது பற்றி?

*பதில்:* நான் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் சுனாமி பாதிப்புக்குள்ளான புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரச உளவுப்படைகள் ஊடுருவி நிவாரணம் என்ற பெயரால் புலிகளைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர். எனவே, சமாதானத்திற்கு இது சாதகமாக அமையுமா என்பதை எதிர்காலம் தான் தீர்மானிக்கும். அடுத்த கட்டமாக யுத்தம் நோக்கி நகர்வதற்கு இது வழிவகுத்து விடுமோ என்ற சந்தேகம் எனக்குண்டு.

*கேள்வி:* மலையகத்தில் இராணுவப் பயிற்சி நடைபெறுவதாக சிங்கள ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன இது பற்றி...

*பதில்:* மலையகத்தில் இராணுவப் பயிற்சி நடைபெறுகிறது என்பது எப்படி வடக்கு-கிழக்கு மக்களைக் கடந்தகால அரசியல்வாதிகள் அந்நியப்படுத்தினார்களோ அதுபோல் மலையகத் தமிழர்களையும் தனிமைப்படுத்தும் முயற்சியை இது வெளிப்படையாகக் காட்டுகிறது எனலாம்.

*கேள்வி:* ஜே.வி.பி. அரசில் இருந்து பிரிந்து சென்றால் என்ன நடக்கும் என நினைக்கிறீர்கள்?

*பதில்:* ஜே.வி.பியினர் எப்போதும் அகங்காரத்துடன் முடிவெடுப்பவர்கள். தற்போதும் அரசு தங்களிடம் அடிபணிய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். அத்துடன், அடுத்த தேர்தலில் தங்கள் நாடாளுமன்ற அங்கத்துவத்தை அதிகப்படுத்திக் கொண்டு மிகப்பெரும் மூன்றாவது சக்தியாக வேண்டும் என்பதே அவர்களின வியூகமாகும்.

சிங்களப் பிரதேசங்களில் தற்போதே இனவாத ரீதியான சில கருத்துக்களைக் கூறி வருகின்றனர். சிங்கள மக்கள் தமிழர்களின் விடயத்தில் அசட்டையாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மலையக மக்கள் முன்னணியும் இணைந்து மிகப்பெரும் நாடாளுமன்ற அங்கத்துவத்தைப் பெறக்கூடிய வாய்ப்புண்டு. எனவே, அவர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் நாம் எமது நாடாளுமன்ற அங்கத்தவர் பதவிகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பது தான் அவர்களின் தற்போதைய பிரசாரமாக இருக்கிறது. எனவே, அரசிற்கும் ஜே.வி.பிக்குமிடையே முறுகல் ஏற்பட்டதால் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்வரை பொறுமையாக இருந்தாலும் அதன் பின்னர் இன்னொரு தேர்தலைச் சந்திப்பதைத்தான் அவர்கள் இலக்காகக் கொண்டுள்ளார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

*கேள்வி:* நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள். ஆனால், இந்திய வம்சாவழித் தலைவர்களின் வாக்குரிமை மசோதா நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஜே.வி.பியினர் அனைவரும் ஆதரவாக வாக்களித்துள்ளார்களே?

*பதில்:* மலையக மக்களுக்காக ஜே.வி.பி. அனுதாபப்படுவதாகக் காட்டிக்கொள்வது 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத' கதைதான். அந்தக் கட்சி ஆரம்ப காலத்திலிருந்து மலையக மக்களைத் தன் வசப்படுத்தவேண்டும் என்ற சதி முயற்சியிலீடுபட்டதே தவிர, மலையக மக்களின் பிரச்சினைகளில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் அவர்கள் எடுக்கவில்லை.

*கேள்வி:* நீங்கள் ஏற்கனவே ஐ.தே.க அரசில் அமைச்சராக இருந்துள்ளீர்கள். நீங்கள ஐ.தே.கவுடன் இணைந்து சுனாமி நிவாரணப் பணிகளில் ஈடுபடவும் தொடர்ந்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் வாய்ப்புண்டா?

*பதில்:* ஐ.தே.கவுடன் நாங்கள் சில பேச்சுகளை நடத்தியுள்ளோம். முதல் கட்டமாக அரசிறகுக் கிடைக்கும் நிவாரண உதவிகளும் வெளிநாட்டிலிருந்து நேரடியாகக் கிடைக்கும் நிவாரண உதவிகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எவ்வித தடையுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதை ஐ.தே.க. வெளிப்படையாகக் கூறவேண்டும் என்பதோடு சம்பந்தப்பட்டவர்களிடம் வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டிருக்கிறோம். அதில் அவர்களின் நம்பிக்கைத் தன்மையைப் புரிந்து கொண்டு அவர்களுடன் இணைந்து சில முயற்சிகள் எடுப்பதைப் பற்றித் தீர்மானிக்க முடியும்.

*கேள்வி:* வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

*பதில்:* சிறுபான்மைத் தமிழ்மக்கள் அவர்கள் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அரசினால் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகினறனர் என்பதைப் புரிந்துகொண்டு அனைத்துத் தமிழ்மக்களும் மிகப்பெரும் சக்தியாக ஒன்றிணைய வேண்டும். ஐம்பது வருடகால ஜனநாயக, ஆயுதப் போராட்டத்தின்பின் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கின்ற ஒருநிலை வடக்கு-

செவ்விகண்டவர்:
**பரம்**

கிழக்குச் சிறுபான்மைத் தமிழர்களுக்குக் கிடைத்துள்ளது. அந்நிகழ்ச்சி நிரலில் மலையக மக்களும் இணைந்து கொள்ளவேண்டும் என்பதே தற்போது எனது மிகப்பெரும் எதிர்பார்ப்பு.

*கேள்வி:* நீங்கள் இப்படிக் கூறுகிறீர்கள் இ.தொ.கா.அரசுடன் இணையும் பட்சத்தில் இனவாதிகளுக்கு அது ஒரு பிரசாரமாக அமையாதா?

*பதில்:* இன்று வடக்கு-கிழக்கில் சகல அரசியல் அமைப்புக்களும் ஒரு பொது கொள்கையில் ஒன்றிணையும் நேரத்திலும் அரசியல் சுயலாபத்திற்காகச் சிலர் எதிராகச் செயற்பட்டு வருகின்றனர். இதுபோலவே, மலையகத்திலும் சிலர் செயற்பட்டு வருகின்றனர். இது எமது அரசியல் பயணத்தில் சவாலான தடையாக அமையாது என்பதே எனது நிலைப்பாடு. ☆

# ஆட்சியைப் பிடிப்பதல்ல ஐ.தே.கட்சியின் நோக்கம் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதே ஒரே எண்ணம்

### முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர தகவல்

கொழும்பு,ஜன.28

ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் ஐதேகவுக்குக் கிடையாது. ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படல் வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளவேண்டிய சரியான திட்டம் அரசிடம் இல்லை.

- இப்படிக் கூறுகிறார் முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே மஹிந்த விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசுக்கு வெளிநாட்டு உதவிகள் தேவைக்கு அதிகமாகக் கிடைத்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து வளங்களையும் மீளக்கட்டியெழுப்பி வழங்கக்கூடிய வசதிகளும் இருக்கின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களை ஆகக்குறைந்தது அரச அதிகாரிகள் நேரில் சென்று பார்க்கக்கூட இல்லையென்று குறைகூறப்படுகின்றது.

தென்பகுதியைவிட அம்பாறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் 2ஆயிரத்துக்கும் சற்று அதிகமானோரே கொல்லப்பட்டனர். ஆனால், அம்பாறை மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அங்கு பொதுஅமைப்புகளின் பிரமுகர்களைத் தவிர, அரச பிரதிநிதிகள் யாருமே பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று பார்க்கவில்லை.

இருப்பிடங்களை இழந்தவர்களை மீள எங்கு குடியேற்றுவது என்பது பற்றி அரசிடம் நிலையான திட்டம் எதுவும் இல்லை.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி ஐ.நா.சாசனத்தின் அடிப்படையில் மக்கள் தாம் வாழ்ந்த இடங்களில் சென்று வாழ்வதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களை அவர்களின் விருப்பமின்றி வாழ்ந்த இடங்களில் இருந்து அகற்ற முடியாது என்பதே இதன் அர்த்தமாகும்.

பூகம்பப் பேரலை ஏற்பட்டது என்பதற்காக மக்களை வேறு இடங்களுக்கு அகற்றமுடியாது. அனர்த்தங்கள் ஏற்பட்டால் அதிலிருந்து தப்புவதற்கு மாற்றுவழி பற்றிச் சிந்திக்க வேண்டும். பூகம்பத்தில் இருந்தும் நீரிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளப் பலகையிலான வீடுகளை அமைத்து அனர்த்தங்கள் ஏற்படும் போது அதிலிருந்து தப்புவதற்கான வழிமுறைகளை அமெரிக்கா, ஜப்பான் உட்படப் பெரும்பாலான நாடுகள் கையாண்டுவருகின்றன.

இதுபோன்ற திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமேயொழிய மக்களை அவர்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து அகற்றுவதல்ல இப்பிரச்சினைக்குத் தீர்வு.

மீனவர்கள் தமது வள்ளங்களையும் மீன்பிடி உபகரணங்களையும் கடற்கரையில் விட்டுவிட்டு நூறு மீற்றருக்கு அப்பால் போய் நித்திரை கொள்ளமுடியாது. இது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

எனவே, அரசு இதுவிடயத்தில் தனது உறுதியான திட்டத்தை அறிவிக்கவேண்டும் - என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, முன்னாள் அமைச்சர் பி.தயாரட்ண, மயோன் முஸ்தபா எம்.பி.ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க-3)

## தலவாக்கலை நகரில் அஞ்சலிக் கூட்டம்

தலவாக்கலை,ஜன.28

ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திக்காக நேற்றுமுன்தினம் தலவாக்கலை நகரில் ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலியும், பிரார்த்தனையும் செய்யப்பட்டன.

கடந்தமாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலையில் சிக்கி பல்லாயிரக்கணக்கான மகக்கள் உயிரிழந்தனர். இவர்களின் ஆத்மசாந்திக்காகவே தலவாக்கலையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது. நகர மத்தியிலுள்ள சந்தியில் காலை 8மணிமுதல் 10மணிவரை இந்நிகழ்வு நடைபெற்றது.

அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், நகரமக்கள் தோட்டமக்கள், தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம், சுமண மகாவித்தியாலம், சென். பற்றிக் கல்லூரி ஆகியவற்றின் மாணவ - மாணவிகள், ஆசிரியர்கள், பொலீஸார் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

முதலில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. அதன்பின்னர் இரண்டு நிமிடமௌன அஞ்சலியும், பிரார்தனையும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளைத் தலவாக்கலை - லிந்துலை நகரசபை உபதலைவர் எல்.பாரதிதாசன் உள்ளிட்ட குழு மேற்கொண்டிருந்தது. (க-3)

# சக்கரநாற்காலி வழங்கப்பட்டது

வலி.தென்மேற்கு,ஜன.28

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்குச் சக்கர நற்காலி ஒன்றை யாழ்.சுகாதாரத் திணைக்களம் கடந்தவாரம் வழங்கியுள்ளது. வைத்தியசாலை விடுதிகளுக்கு அவசர நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு இந்தச் சக்கர நாற்காலி பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை -

இந்த வைத்தியசாலைக்குக் கடந்தவாரம் பட்டதாரிப் பயிலுநர் ஒருவர் யாழ்.சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

(8-135)

மிகவும் இரகசியமாக இயங்கிவந்த

# உள்ளூர் துப்பாக்கித் தொழிற்சாலை வென்னப்புவப் பகுதியில் சுற்றிவளைப்பு!

கொழும்பு,ஜன.28

மிகவும் இரகசியமான முறையில் செயற்பட்டுவந்த துப்பாக்கித் தொழிற்சாலையொன்று பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு தயாரித்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சில துப்பாக்கிகளும் முற்றுப்பெறாத நிலையில் இருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம் திகதி வென்னப்புவ வாய்க்கால் என்ற இடத்தில் மறைவிடமொன்றில் மிகவும் இரகசியமாக இயங்கிவந்த இந்தத் தொழிற்சாலையைச் சுற்றிவளைத்த சிலாபம் பொலீஸார், அங்கு துப்பாக்கிகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கைப்பற்றினர்.

ஆயுதமொன்றுடன் கைதுசெய்யப்பட்ட நபரொருவர் கொடுத்த தகவலை அடுத்தே இந்தத் தொழிற்சாலை முற்றுகையிடப்பட்டது எனச் சிலாபம் பொலீஸ் அத்தியட்சகர் ரோசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்கு மேலாக இயங்கிவந்த இந்தத் தொழிற்சாலையில் இருந்து பல அரசியல்வாதிகளும் துப்பாக்கிகளை விலைக்கு வாங்கியுள்ளனர் என அத்தொழிற்சாலையின் உரிமையாளர் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளாராம்.

பாதாள உலக நபர்களும் சட்டவிரோதக் குமபல்களும் மேற்படி தொழிற்சாலையில் இருநது துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது. (க-8)

# இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்திய அரசு தொடர்ந்தும் கைகொடுக்கும்

## குடியரசுத் தினத்தில் இந்தியத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.28

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுபபுவதற்கு இந்திய அரசு தொடர்ந்தும் கைகொடுத்து உதவும் என்று இந்தியத் தூதுவர் திருமதி நிருபமா ராவ் கூறினார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லமான இந்தியா இல்லத்தில் இந்தியாவின் 56 ஆவது குடியரசுத்தின வைபவம் மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது.

இலங்கையில் வாழும் இந்தியப் பிரஜைகளும், வர்ததக சமூகத்தினரும், பல்கலைக்கழக மாணவாகளும் இந்த வைபவத்தில் கலந்து கொணடனர்.

சம்பிரதாயபூர்வமாக இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாமின் குடியரசுத் தினச் செய்தியை தூதர் நிருபமா ராவ் வாசித்தார்.

அப்போது இந்தியத் தூதுவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இன்று ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு சரியாக 30 நாள்கள் பூர்த்தியாகின்றன.

இப்பேரலை அனர்த்தத்தினால் இந்தியாவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. என்றாலும் தன்னைச் சுயமாக மீளக்கட்டியெழுப்பும் தைரியம் இந்தியாவுக்கு உண்டு.

எமது பாதிப்பையும் பொருட்படுத்தாது அண்டை நாடான இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணிக்கு உதவுவதில் இந்தியாவும், இந்திய மக்களும் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே பாரம்பரிய கலை, கலாசார, வர்த்தக, வாணிபத் தொடர்புகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. அவை மேலும் வலுப்படுத்தப்படும் - என்றார். (எ-க)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கேள்வி அறிவித்தல்

குடிசார் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்த ஒப்பந்தகாரரிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தகுதியான கேள்விதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணங்களை யாழ்ப்பாணப் பல்லைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 03.02.2005 அன்று பி.ப.3.00 மணிவரை கேள்விப் பத்திரங்களை உதவிப்பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | ஆகக் குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகை | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. முகாமைத்துவ கற்கைகள் மற்றும வணிகபீட மூன்று மாடிக் கட்டடங்கள்/ அதனோடிணைந்த நிர்மாணங்கள் திருத்த / நிறப்பூச்சு வேலைகள். | M8 | Rs.10,000/- | Rs.500/- |
| 2. விளையாட்டரங்கின் கிழக்கு/ தென்கிழக்கு எல்லைகளில் மதில, முட்கம்பி வேலி திருத்தம் மற்றும் புனரமைப்பு வேலைகள். | M9 | Rs. 7,500/- | Rs.500/- |

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 14.02.2005 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்கிடைக்கக் கூடியவாறு தலைவர் கேள்விச்சபை யாழ்.பல்கலைக்கழகம் அவர்களுக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும்.

தேவைப்படின் கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் கட்டணம் ஏதுமின்றி பரிசீலிக்கமுடியும்.

த.பெ.இல.57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி-40668)(42-19-45-26)

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.


# பாதிப்புற்றோருக்கான நிவாரணப் பொருள்களை ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக விநியோகிக்காதீர்!

## மயோன் முஸ்தபா எம்.பி.வலியுறுத்து

கொழும்பு,ஜன.28

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுககு அரசால் வழங்கப்படவிருக்கும் நிவாரணக் கூப்பன்களுக்கான பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாக வழங்கப்படக் கூடாது. ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக வழங்கினால் அதில் பல மோசடிகள் இடம்பெற வாய்ப்புகள் உண்டு.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸதபா.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அரசு வாராந்தம் 375ரூபா பெறுமதியான நிவாரணக் கூப்பன்களை ஒவ்வொருவருக்கும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நிவாரணக் கூப்பன்களுக்கான பொருள்கள் பல நோககுக் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக வழங்கப்படக்கூடாது. அவை தரம்குறைந்த பொருள்களைக் குறைவான விலைக்குப் பெற்று கூடுதலான விலையைக் குறித்து இம்மக்களுக்கு வழங்கும். அத்தோடு, நிறுவையிலும் அதிக மோசடிகள் இடம்பெறும்.

ப.நோ.கூ. சங்கங்களுக்கு இப்பொருள்களை வழங்கும் பொறுப்பைக் கொடுத்தால் அவை சரிவர செயற்படமாட்டா.

ஆகவே, இந்தப் பொருள்கள் வேறு நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது கடைகள் மூலமாகவோ வழங்கப்பட்டால் அது பிரயோசனமானதாக அமையும். மக்கள் தாம் விரும்பிய கடைகளில் பொருள்களைப் பெறக்கூடிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படவேண்டும். அல்லது அந்த உதவி நேரடியாக மக்களுக்குப் பணமாக வழங்கப்படவேண்டும் எனக் கூறினார் அவர். (க-3)

### பருத்தித்துறையில் மின் விநியோகம் சீரற்ற நிலையில்

பருத்தித்துறையில் சில பகுதிகளில் இரவுவேளைகளில் சீரற்ற மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, மருதங்கேணி வீதி, 4ஆம் குறுக்கு வீதி, புனித தோமையார் ஒழுங்கை, புனித அந்தோனியார் ஒழுங்கை, மணல் ஒழுங்கை உள்ளிட்ட அதனை அண்டிய பகுதிகளிலேயே இரவு வேளைகளில் மின்சாரம் திடீரெனத் தடைப்படுகின்றது. அத்துடன், மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் சில நேரங்களில் வலுக் குறைந்த மின்சாரத்தையே பாவனையாளர்கள் பெறுகின்றனர். இது அப்பகுதியில் உள்ள மின் உபகரணங்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கக் கூடியதாக உள்ளது. (3-203)

### செஞ்சிலுவைக் குழு நிவாரணப் பொதிகள் கையளிப்பு

வலி.தெற்கு,ஜன.28

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கவென செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நிவாரணப் பொதிகளை பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளனர்.

இவர்கள் உடுவில் சபாபதிப்பிள்ளை முகாம் மற்றும் உடுவில், தாவடி, இணுவில், சுன்னாகம், ஏழாலை போன்ற இடங்களில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தங்கி உள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, பருத்தித்துறை போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு துவாய்கள், பெட்சீற், பிளாஸ்ரிக் வாளிகள் மற்றும் பாய்கள் போன்ற பொருள்கள் அடங்கிய பொதிகளை இக்குழு வழங்கியுள்ளது. (10-152)

### கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.28

நயினாதீவு, வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயிலின் புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகத் தேவஸ்தான அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (8-202)

### சாவகச்சேரியில் நடைபெற்ற பற்சிகிச்சை முகாம்

தென்மராட்சி,ஜன.28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கச்சாய் வினோபா சனசமூக நிலையத்தில் இலவச பற்சிகிச்சை முகாமினை அண்மையில் நடத்தினர்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பற்சிகிச்சைப் பிரிவு உதவி விரிவுரையாளர் டாக்டர் திருமதி அன்னவதனி சிவகுமாரன் கலந்துகொண்டு பற்சிகிச்சையினை மேற்கொண்டார்.

சிகிச்சை முகாமில் முன்பள்ளிச் சிறார்கள் உட்பட 150 இற்கு மேற்பட்டோருக்கு பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

லயன்ஸ் கழக வலயத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட 50 பேருக்கு பற்பசை, தூரிகைகள் இலவசமாக வழங்கப்பட்டதாக கழகத் தலைவர் லயன் செ.கா. நவரத்தினம் தெரிவித்தார். (10-117)


அனைவருக்கும் புலமைப்பரிசில்

COMPUTER EXPRESS
Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை
யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

January 30th இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
29- 01- 2005
30- 01- 2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647

# பூநகரி ஊடான பேருந்துச் சேவைகளை அதிகரிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

பூநகரி,ஜன.28

பூநகரி ஊடாக ஜெயபுரம் பகுதிக்குச் செல்லும் பேருந்து சேவைகளை அதிகரிக்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னர் ஜெயபுரம் பிரதேசத்தில் இயங்கிய பாடசாலை, பிரதேச சபை, பிரதேச செயலகம், கூட்டுறவுச் சங்கம் என்பன பூநகரிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்களும் மக்களும், ஊழியர்களும் வேரவில் ஊடாக வலைப்பாடு செல்லும் பேருந்தில் பயணஞ் செய்ய வேண்டியுள்ளது. 12 ஆம் கட்டையடியில் இறங்கி இவர்கள் 4 கிலோ மீற்றர் தூரம் நடந்து தமது பகுதிகளுக்குச் செல்லவேண்டியுள்ளது.

இதனால், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பெருஞ் சிரமங்களை அடைகின்றனர். இப பகுதியூடான போக்குவரத்துச் சேவைகளை அதிகரித்துப் பயணிகளின் சிரமங்களைக் குறைக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (8-291-204)

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மீண்டும் பூநகரியில்

பூநகரி,ஜன.28

கிளிநொச்சி, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மீண்டும் பூநகரியில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தின் பூநகரி மீது மேற்கொண்ட வலம்புரி இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாகப் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அங்கிருந்து இடம்பெயர்ந்து ஜெயபுரம் பகுதியில் இயங்கி வந்தது.

இது கடந்த முதலாம் திகதியில் இருந்து பூநகரி வாடியடிப்பகுதியில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது எனப் பூநகரிச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (203-403)

## விசேட பிரார்த்தனை

பூநகரி,ஜன.28

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களின் ஆத்மசாந்திக்காகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆத்ம பலம் வேண்டியும் விசேட பிரார்த்தனை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பச்சிலைப்பள்ளி பிரதேச முகாவில் திரியாய் அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (202)

## இலக்கத்தகடுகள் விநியோகம்

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசத்தில் பாவனைக்குட்படுத்தப்படும் சைக்கிள்களுக்கு, 2005ஆம் ஆண்டுக்கான இலக்கத்தகடுகள் பிரதேச சபையால் வழங்கப்பட்டு வருகின்றன.

சைக்கிள் உரிமையாளர்கள் தங்கள் பாவனையிலுள்ள சைக்கிள்களின் உரிமங்களை கரைச்சிப் பிரதேசசபைச் செயலகத்தில் அல்லது பிரதேச செயலக உப பணிமனையில் பெற்றுக கொள்ளலாம் என கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (எ-204)

## ஆசிரியர்கள் நியமனம்

பூநகரி,ஜன.28

கிளிநொச்சி, பூநகரி மகாவித்தியாலயத்திற்கு புதிதாக 8 பட்டதாரிப் பயிலுநர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த ஜீ.சி.ஈ உயர்தர பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தீருமென எதிர்பார்ப்பதாக பாடசாலை அதிபர் பொன்.தில்லைநாதன் தெரிவித்துள்ளார். (8-403-202)

## விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன

பூநகரி,ஜன.28

பூநகரிப் பிரதேசத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பூநகரிப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செயலகத்தில் நடைபெற்றது.

பூநகரி விவசாயப் போதனாசிரியர் திருமதி ந.சத்தியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.அருந்தவராசா கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் 30 பயனாளிகளுக்கு மரக்கறி விதை வகைகள், சிறுதானியங்கள், மாங்கன்றுகள் போன்ற உள்ளீடுகள் வழங்கப்பட்டன. (8-403-202)

## இலக்கத்தகடுகள் இல்லாத வாகனங்கள் மீது நடவடிக்கை

கிளிநொச்சி,ஜன.28

மோட்டார் வாகனங்களில் இலக்கத்தகடுகள் பொருத்தாத வாகனச் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கும் உரிமையாளர்கள் தங்களின் வாகனங்களின் முன், பின் பகுதிகளில் பொருத்தமான இடத்தில் இலக்கத்தகடுகளைப் பொருத்தியிருத்தல் வேண்டும். அத்துடன், இலக்கத் தகடுகள் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வீதியில் வாகனங்களைச் செலுத்தும் போது இலக்கத்தகடுகள் வாகனத்தில் உள்ளதா என்பதைக் கவனத்தில் எடுத்தபின்பே செலுத்த வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-202)



ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட சமர்ப்பணத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சாந்தன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## பூநகரியில் நடமாடும் ஆயுள்வேத வைத்தியசேவை

பூநகரிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் பூநகரிப் பிரதேச செயலர் பவானியின் மேற்பார்வையில் பூநகரிப் பிரதேசசபை ஆயுள்வேத வைத்திய அதிகாரி எம்.தில்லைநாயகம் தலைமையில் நடமாடும் ஆயுள்வேத வைத்தியசேவை பூநகரி பிரதேசபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

மார்ச் மாதம் முதலாம் திகதி ஞானிமடம் கிராமத்திலும், 3 ஆம் திகதி நல்லூர் கிராமத்திலும், 8ஆம் திகதி கௌதாரிமுனைக் கிராமத்திலும், 10 ஆம் திகதி ஆலங்கேணிக்கிராமத்திலும், 13 ஆம் திகதி செக்காலைக் கிராமத்திலும், 17 ஆம் திகதி முட்கொம்பன் கிராமத்திலும், 22 ஆம் திகதி கௌதாரிமுனைக் கிராமததிலும், 24 ஆம் திகதி பள்ளிக்குடாக் கிராமத்திலும் இந்த நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவை நடைபெறவுள்ளதாக பிரதேசசபைச் செயலர் பவானி அறிவித்துள்ளார். (8-202)

## வெளிநாட்டு விசா பெறுவதற்கான உறுதிப்படுத்தும் ஆவணம் வழங்கும் பொறுப்பு ஐ.நா. அலுவலகத்துக்கு இல்லை

திருவையாறு,ஜன.28

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கனடா போன்ற குடியேற்ற நாடுகள் விசா வழங்கத் தீர்மானித்ததையடுத்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்கள் விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த விசாவைப் பெறுவதற்கு ஐ.நா.அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும் என்ற தகவல் பரவியதால் கிளிநொச்சி ஐ.நா.அலுவலகத்தில் பெருமளவான மக்கள் குவிகின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அலுவலக உத்தியோகத்தர்களிடம் கேட்டபோது -

இவ்வாறான உறுதிப்படுத்தும் ஆவணங்களை வழங்குவதற்கான சாத்தியம் இல்லை என்றும் உள்நாட்டில் பாதிக்கப்பட்டவர்களை உறுதிப்படுத்தும் செயற்பாடு அரசையே சாரும என்றும் அவர்கள் தெரிவித்தனர். (8-393-202)

## மீன் பிடி உபகரணங்கள் எதுவுமற்ற நிலையில் மீனவர் குடும்பங்கள்

ஒட்டுசுட்டான்,ஜன.28

சுனாமி அனர்த்தத்தினால் பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு மீனவக்குடும்பங்கள் தற்போது தமது அன்றாடத் தொழிலை மேற்கொள்வதற்கான மீன்படி உபகரணங்கள் எதுவுமற்ற நிலையில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் முடங்கிக் கிடக்கின்றன.

இவர்கள் உறவுகளை இழந்த துயரத்தில் ஆழ்ந்திருப்பதோடு இனிமேல் தாம் எதுவித தொழிலையும் செய்யமுடியாத நிலையில் தவித்து நிற்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பாடசாலையில் 34குடும்பங்களும், உறவினர்களின் வீடுகளில் 20 குடும்பங்களும் தங்கியுள்ளனர்.

இவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (8-203-341)

## மாணவர்களின் புதுமுகவிழா

பூநகரி,ஜன.28

கிளிநொச்சி, பூநகரி மகாவித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான புதுமுகவிழா நேற்று வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் பொன்.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார், பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (8-403-202)

## பூநகரிப் பிரதேச சபைக்கு பௌசர்

பூநகரி,ஜன.28

பூநகரிப் பிரதேச சபைக்கு 40லட்சம் ரூபா பெறுமதியான 12 ஆயிரத்து 500 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய பௌசரை 'நீர்ப்' நிறுவனம் வழங்கியுள்ளது.

திருகோணமலையில் உள்ள 'நீர்ப்' நிறுவன அலுவலகத்தில் வைத்து பூநகரிப் பிரதேச சபையினரிடம் இந்த பௌசர் கையளிக்கப்பட்டது.

இதனை தாம் மிக விரைவில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (8-203-403)

## ஆலயம் புனரமைப்பு

ஒட்டுசுட்டான்,ஜன.28

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

'ரிவிபல' இராணுவ நடவடிக்கையால் கடுமையான சேதத்திற்குள்ளாக்கப்பட்ட இக்கோயில் கடந்த ஐந்து வருடகாலமாகப் புனரமைப்புகள் எதுவும் இன்றிச் காணப்பட்டது.

தற்போது இவ் ஆலய நிர்வாகத்தினர் அதன புனரமைப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (8-203-341)




## சுகாதார நிலைய கட்டடப் பணிகள் பூர்த்தியாகவில்லை

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்கள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட வேலைகள் நிறைவுபெறாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் ஏற்பட்ட இயற்கையனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதார சேவையை வழங்குவதில் திணைக்களத்திற்கான ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாமையால் திணைக்களம் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (8-202)



ஆழிப்பேரலைக்கு பலியானோரின் நினைவுதினம் நேற்றுமுன்தினம் மணற்காட்டில் நடைபெற்றது. உயிரிழந்தோரின் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் நாட்டப்பட்டுள்ள சிலுவைகளை அணைத்தபடி உறவினர்கள் கதறியழுவதையும் அஞ்சலி நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுக்குப் பெண் ஒருவர் சிற்றுண்டி வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக் கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்பபாணம். (41246)

P-IV (2.4GHz) கறுப்புநிற கணனி விற்பனைக்குண்டு. 128 MB RAM, 30GB HDD, HP writer, UPS உம் இணைந்தது. தொடர்பு: T.P.: 0776133317. (41381)

## வயற்காணி/வீடு வளவும் விற்பனைக்கு

வடமராட்சி, துன்னாலை தெற்கு, ஓந்திராயடி, 20 பரப்பு வயற்காணியும் நெல்லியடி கிழக்கு, புதுத்தோட்டம்,, குருக்கட்டில் 2 பரப்புக் காணியில் கல்வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: மு.பாக்கியநாதன், பாக்கியமலர், வதிரி, கரவெட்டி. T.P.: 0777 594040. (41368)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த இராஜசேகர் பவானி என்பவரது தேசிய அடையாள அட்டை, தொழில் அட்டை, போக்குவரத்து அனுமதிப்பத்திரம் ஆகியன யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கச்சேரி, முல்லைத்தீவு அல்லது பவானி களஞ்சியம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி ஆகிய முகவரிகளில் ஒப்படைக்கவும். T.P.: 021 222 2371. (41350)

## காணி, வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 6¼ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (41372)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசேந்திரா வீதியில் இல.10 இல் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பத்மநாதன் மாலா, C/o வ.அம்பலவாணர், 91, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 7910, 0776 969467. (41353)

## மாடி வீடு வாடகைக்கு

"சிவனடி", இல.141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0776016257. (41342)

## மாடி வீடு விற்பனைக்கு,

கச்சேரி நல்லூர் வீதியில் 4000 சதுரஅடி கொண்டதும் நிலத்தின்கீழ் அறைகளுடன் படுக்கை வசதிகள் கொண்டதும் சுற்றுமதில்களுடன் கூடியதுமான 6பரப்புக் காணியில் மாடி வீடு உடனடியாக (மேலதிக கட்டடத்துடனும்) வற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.சிவராஜா, "ராஜவாசா", இல.151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873 (சிவராஜா), 6776203974 (மகா). (41383)

## மணமக்கள் தேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர்கள் அனைத்துத்துறை சார்ந்த வெளிநாட்டு, உள்நாட்டு இந்து, கிறிஸ்தவ மணமக்கள் தேவைக்குத் தொடர்பு: அமைப்பாளர், சிவாலயா சர்வ தேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844. (41339)


## தேவை

கணக்குப் பதிவுப் பிரிவில் பணியாற்றுவதற்கு க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த கணனிப் பிரயோக அறிவுடைய ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வயதெல்லை: 20~30 வருடங்கள்
விண்ணப்ப முடிவுதிகதி: 08~02~2005
விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
**யூரோவில்** (41385)(26-19-45)
866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



## வலி.தென் மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# பொங்கல் விழா



காலம்: 29-01-2005 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10.00 மணி
இடம்: சங்கக் காரியாலயம்
தலைவர்: திரு.தி.ராஜ்குமார்

**நிகழ்ச்சி நிரல்**

பொங்கல் நிகழ்வு
மௌன இறைவணக்கம்
வரவேற்புரை: திரு.க.கிருஸ்ணமூர்த்தி (பணிப்பாளர், சபை உறுப்பினர்)
தலைமை உரை: திரு.தி.ராஜ்குமார் (தலைவர்)
பிரதம விருந்தினர்கள்: திரு.எஸ்.கனகசபாபதி (கூ.அ.உ. ஆணையாளர்)
திரு.ஆ.சுப்பிரமணியசர்மா (பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்)
திரு.மாவை. சோ.சேனாதிராஜா (நாடாளுமன்ற உறுப்பினர்)
திரு.ந.ரவிராஜ் (நாடாளுமன்ற உறுப்பினர்)
சிறப்பு விருந்தினர்கள்: திரு.அன்பு (அரசியல்துறை, சண்டிலிப்பாய்)
திரு. Dr.ஆர்.ஞானசேகரம் (பதில் கால்நடை உதவிப் பணிப்பாளர்)
திருமதி Dr.சுப்பிரமணியம் (கால்நடை வைத்திய அதிகாரி)
திரு.பொன்.அச்சுதம்பிள்ளை (முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)
பேச்சாளர்: திரு. Dr.வை.ரகுநாதன் (கால்நடை வைத்திய அதிகாரி, வட்டுக்கோட்டை)
திரு. K.தர்சினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு. J.செல்லத்துரை (வர்த்தக மேம்பாட்டு உத்தியோகத்தர் - யாழ்.கைத்தொழில் மன்றம்)
திரு.ந.சிவரஞ்சன் (உபதலைவர்)
திரு.வீ.சிவசோதிராஜா (பணிப்பாளர் சபை உறுப்பினர்)
திரு.இ.இளமுருகன் (பணிப்பாளர் சபை உறுப்பினர்)
திரு.தி.தேவராஜா (செயலாளர்)
நன்றியுரை: திரு.நா.தனலிங்கம் (பொது முகாமையாளர்)

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

7ஆம் கட்டை,
சண்டிலிப்பாய். வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர்,
(41374)(26-19-45) கூட்டுறவுச் சங்கம்.


## மீனவர்களுக்கு உலர் உணவுகள

சுனாமியால் பாதிக்கபட்ட மாதகல் லூர்து மேரி, விநாயகர், உதய தாரகை, ராஜராஜேஸ்வி ஆகிய மீன்பிடிச்சங்கங்களின் உறுப்பினர்களான 680 பேருக்கு ஒரு வார உலர்உணவு வகைகளை 'கியூடெக்' நிறுவனம் வழங்கியுள்ளது. சுனாமிக்குப் பின்னர் கடற்றொழிலில் ஈடுபடாமலுள்ள குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.(10-95)

## கோப்பாயில் ஆங்கில வகுப்பு

கோப்பாய் சாயி சமித்தி நிறுவனத்தினர் இலவச ஆங்கில பாடப்போதனை வகுப்புகளை நடத்திவருகின்றனர். கடந்தவாரம் முதல் நடத்தப்பட்டு வரும் இந்த ஆங்கில பாட வகுப்புகளில் 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.(3-203-72)

## தீபம் ஏந்தி வழிபாடு

சுனாமி அனர்த்தத்தால் இறந்த ஆத்மாக்களுக்கும், உறவுகளை இழந்து துன்பப்படும் மக்களுக்காகவும் வேண்டி மாரீசன்கூடல் புனித கயித்தார் தேவாலயத்தில் திருப்பலியும் தீபம் ஏந்தி விசேட வழிபாடுகளும் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டில் மாரீசன்கூடல் பங்கிற்குட்பட்ட அனைத்து மக்களும் கலந்துகொண்டனர். (10-95)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்மாநகர சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாஷையூர் மகப்பேற்று மருத்துவ நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா இவ்வைத்தியசாலையை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கவுள்ளார். (10-202)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜன.28

சாவகச்சேரி டச்சு வீதி, புளியடிச் சந்தியில இரண்டு சக்கர உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இந்த விபத்தில் மல்லாகம், கோயில் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை மோகனச்செலவம் (வயது 37) என்பவரே காயமடைந்தவராவார்.

காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்தியில் அனுமதிக்கபட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைகு அனுப்பிவைக்கப்பட்டார். (10-117)


## வெள்ளிவிழா நாளில் நன்றி கூறுகிறோம்

ஸ்ரீ கணேசா கடைச்சல் தொழிலகம்



இல.4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது அன்பார்ந்த வாடிக்கையாளரே!

இன்று (28.01.2005) வெள்ளிக்கிழமை எமது தொழிலகம் வெள்ளிவிழாக் காண்கின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

இருபத்தைந்து அகவையைப் பூர்த்திசெய்து மக்கள் பணிக்கு அணிசெய்யும் தொழிலக உரிமையாளராகிய யான் எனது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உங்கள் ஆதரவை எதிர்காலத்திலும் அன்புள்ளத்தோடு வேண்டிநிற்கின்றேன்.

திரு.ஐ.மனோகரன் (மஞ்சு)
உரிமையாளர்,
(41376)(26-19-45) ஸ்ரீகணேசா கடைச்சல் தொழிலகம், யாழ்ப்பாணம்.


## நெஞ்சுருகும் நினைவுகளில் 41 நாள்கள்

நிகழ்வுகளில் 21 – 10 – 1991



நினைவுகளில் 19 – 12 – 2004

### தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி

(யா/கோப்பாய், நாவலர் தமிழ் வித்தியாலய மாணவி)

*நெஞ்சமெலாம் நிறைந்திருந்த பிஞ்சுமுகம்*
*வஞ்சமிலா உளம் கொண்ட செல்லமொழி*
*கொஞ்சிக் கனகதை பேசும்அகல விழி*
*கொண்டு எம் மனம்நிறைந்த எங்கள் செல்லம்.....!*
*கன்னிமை எய்த முன்பே கண்ணிமை மூடி விட்டாய்*
*காலம் செய்த கொடுமையதால் மாமன்வழி தொடர்ந்தனையோ...!*
*காலமுள்ள காலம்வரை மறந்திடுமோ உன்நினைவு.....!*

எங்கள் அன்புச் செல்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஈமோத்தியில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் இன்று (28.01.2005) வெள்ளிக்கிழமை காலை7.00 மணியளவில் நித்திய இளைப்பாறுதலுக்காக ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய பொலீஸ் நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு.

இவரின் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி
மற்றும் அனைத்து உறவுகளும்.

(41379)(26-19-45)
தகவல்: பொ.தபேந்திரராஜா (தந்தை).

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும், லண்டன் I.B.C. வானொலி பங்குதாரரும், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனில் வசித்தவருமாகிய தொழிலதிபர்

### விஸ்வநாதன் ஸ்ரீகணேசகுமார்

அவர்கள் 20-01-2005 அன்று அகால மரணமானதையிட்டு மகாஜன சமூகம் தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அவரது ஆத்மா சாந்தியடைய சிவகாமிசமேத நடராஜப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (41380)(26-19-45) - மகாஜன சமூகம்.

### தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைக் கட்டியெழுப்ப

# விடுதலைப் புலிகள் வழங்கும் ஒத்துழைப்பை அரசு சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

## மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்



காரைதீவு,ஜன.28

ஆழிப்பேரலையால் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் எம்மாலான அனைத்து உதவிகளையும் அரசுக்கு வழங்குவோம். அரசு இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

- இவ்வாறு தெரிவித்தார் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்.

அனர்த்தத்தில் பலியானோரின் அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் கல்முனை பாத்திமாக் கல்லூரி நலன்புரி நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கௌசல்யன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமியின் நினைவுகளிலிருந்து மக்கள் இனனும் மீளவில்லை. இந்நிலையில் அரசின் தேச மீளமைப்புத் திட்டத்தின் பணிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் சமமாகச் சென்றடைவதை அரசு உறுதிப்படுத்தவேண்டும்.

நாட்டில் தமிழ்பேசும் சமூகம் காலங்காலமாகப் பலவித போராட்டங்களையும் உயிரிழப்புக்களையும் சந்தித்து வந்திருக்கிறது. ஆனால் டிசெம்பர் 26 இல் சுனாமியின் போராட்டம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியதோடு எமது மக்களை திணற வைத்துள்ளது.

எமது தமிழ்பேசும் சமூகம் மீண்டுமொரு முறை கல்வி மற்றும் பொருளாதாரத்தை இழக்க வேண்டி நேரிட்டுள்ளது.

கல்வியும் பொருளாதாரமும் எமது சமூக அடிநாதமாகும். இவற்றை மீளக் கட்டியெழுப்புவதில் அரசு தமிழ் பேசும் சமூகத்தை ஓரக் கண்ணால் பார்ப்பதைத் தவிர்க்கவேண்டும்.

ஜனாதிபதி விடுத்த அன்பான அழைப்பில் தேச மீட்புக்காக ஒன்றிணைந்து செயற்பட களத்தில் இறங்கியுள்ளோம்.

சின்னாபின்னமாக்கப்பட்ட எமது தமிழ் பேசும் சமூகத்தின் பாரம்பரிய தாயகத்தை மீளக்கட்டியெழுப்பவதற்கு நாம் எம்மாலான பூரண ஒத்துழைப்பை அரசுக்கு வழங்கவிருக்கிறோம். அரசு சரியான முறையில் அவற்றைப் பயன்படுத்தி தேசத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். மீண்டும் மக்களிடையே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும் - என்றார்.

மட்டு அம்பாறை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவெனி தனதுரையில் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழ் மக்களைப பொறுத்தவரை உயிரிழப்பு என்பது சாதாரண விடயமாகும். ஆனால், சுனாமி ஏற்படுத்திய உயிரிழப்பு நினைத்துக் கூடப் பார்க்கமுடியாதது. அது வரலாற்றுச் சம்பவமாகும். எமது தேசத்தின் மறக்கமுடியாத நாள் அதுவாகும். அதற்காக நடந்தவைகளை நினைத்து வாழாவிருக்காது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பத் திடசங்கற்பம் பூணவேண்டும்.

உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து பாரிய அழிவுகளைச் சந்தித்த நாம் அவற்றை மீளக்கட்டியெழுப்பத் திட்டங்களை வகுக்கவேண்டும். இழந்த பொருளாதாரத்தையும் கல்வியையும் மீளவும் கட்டியெழுப்பவேண்டும். இதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் இழப்பதென்பதே பெரிய விடயம். ஆனால் சுனாமி ஒரு குடும்பத்தில் எட்டுப்பேரையும் காவுகொண்டுதானிருக்கிறது. எனவே அதனையிட்டுக் காலத்தை வெறுமனே வீணாகக் கழிக்கக்கூடாது. மீளவும் உயிர்ப்போம் எழுவோம் - என்றார்.

முன்னதாகச் சமய அனுட்டானங்கள் நடைபெற்றன. மாவட்ட எம்.பி.கபத்மநாதன், கல்முனை (தமிழ்) பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், அதிபர் வண.சகோ ஸ்ரீபன் மத்தியூ உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (8)

# அம்பாறையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 31ஆவது நாள் அஞ்சலி நிகழ்வுகள் அனுஷ்டிப்பு

### "கடல்தாயே" பாடல் கண்ணீர் மல்கச் செய்தது

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று முதலாவது மாத நிறைவினை முன்னிட்டு அம்பாறை மாவட்டமெங்கும் துக்கதினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டச் செயலக தம்பிலுவில் வளாகத்தில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொதுச்சுடரினை தமிழீழ மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தலைவி தமிழினி ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை தளபதி ராம் ஏற்றிவைத்தார்.

அம்பாறை மாவட்ட அரசியற்றுறைப் பொறுபபாளர் குயிலின்பன், இராணுவத் தளபதி ஜனார்த்தனன், மகளிர் அணி அர்ச்சனா, அலை ஆகியோர் மலரஞ்சலி செய்தனர்.

அம்பாறை மாவட்டத் துயிலுமில்லம் அமைந்துள்ள கஞ்சிக்குடிச்சாற்றில் மற்றுமொரு நிகழ்வு நடைபெற்றது. பொதுச்சுடரினை பரமானந்தம் மாஸ்டரும் தேசியக் கொடியினை துணைத் தளபதி மதுரகவியும் ஏற்றினர். போராளிகளின இராணுவ மரியாதை அணிவகுப்பு நடைபெற்றது.

பிரதான நிகழ்வு திருக்கோவில் பகுறப் போடி முன்மாரிக் கண்ட மண்டானைப் பகுதியில் நடைபெற்றது. 3 ஆயிரம் குடும்பங்கள் குடியேறிய அப்பகுதியில் அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் சங்கம் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் பொதுச்சுடரினை தளபதி ராம், ஈகச் சுடரினை சுனாமியில் 4 குழந்தைகளையும், கணவனையும் இழந்த திருமதி இந்திரகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஏனைய சுடர்களை விஷேட அதிரடிப்படைத் தளபதி ஜி.விமலசேன, கே.பத்மநாதன் எம்.பி, கத்தோலிக்க மதகுரு ரஜீவன் ஆகியோர் ஏற்றி வைத்து உரையாற்றினர்.

மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மிகவும் உருக்கமான உரை ஒன்றினை நிகழ்த்தினார். நிதர்ஷனம் பிரிவின் 'கடல்தாயே'என்ற பாடல் அனைவரையும் கண்ணீர் மல்கச்செய்தது.

## புலிகளின் போராளிகள் இருவர் மீது விசேட அதிரடிப்படையினர் தாக்கு!

அம்பாறை,ஜன.28

விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் போராளிகள் இருவர் கடந்த செவ்வாயிரவு 10 மணியளவில் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருக்கோயிலில் இருந்து திரும்பிக்கொண்டிருந்த போராளிகளும் பொதுமகன் ஒருவருமே செவ்வாயிரவு 10.10 மணியளவில் அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டனர் என்று அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்தனர். வீதியில் சென்றுகொண்டிருந்த அவர்களைத் திடீரென வழிமறித்த அதிரடிப்படையினர் அவர்களைச் சரமாரியாகத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர். இந்தச் சம்பவம் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது என்று அதிரடிப்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-க)

# அம்பாறை மாவட்ட நிவாரணப் பணிகளில் அதிரடிப் படையினரின் தொல்லை அதிகரிப்பு

### புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை தகவல்

அம்பாறை,ஜன.28


அம்பாறையில் திருக்கோவில், கல்முனை பகுதிகளில் சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் தொண்டர்களையும், பொதுமககளையும் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினர் தொலலைப்படுத்துவது அதிகரித்து வருகின்றது என்று விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் சிறுவர்களைப் பாடசாலைக்குச் செல்வதற்குத் தயார் செய்வதற்காக முடிவெட்டும் நிலையத்துக்குத் தொண்டர்கள் அழைத்து சென்றபோது, ஸ்ரீலங்கா அதிரடிப் படையினரும், பொலீஸாரும் அவர்களை ஆறு மணி நேரத்துக்கு மேலாக தடுத்துவைத்தனர் எனவும்-

புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்க்க கட்டாயப்படுத்துகின்றனர் என அவர்களிடமிருந்து பொய் வாக்குமூலம் பெறுவதற்கு முயற்சித்துளளனர் எனவும் தெரிவித்த அவர் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வந்தே இவர்களை விடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் மீதான நற்பெயரைக் கெடுப்பதற்கு சம்பவங்களைச் சோடிக்குமாறு அவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டு இருப்பது போல் தோன்றுகின்றது என்று குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்ட போது, அதுதொடர்பான பதாகைகளை கட்டிக்கொண்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினர் தொல்லைகளுக்கு உட்படுத்தியுள்ளனர் - என்று அவர் மேலும் கூறினார். (எ-க)



சுனாமி பேரலையில் சிக்கி உயிரிழந்தோரின் நினைவாக திருமலை நகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தைப் படத்தில் காணலாம்.

# இறந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு கல்முனை நீதிமன்றக் கட்டடத்தில்

சுனாமி கடற்கோள் காரணமாக இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில் உள்ள சட்டத்தரணிகள் ஓய்வெடுக்கும் மண்டபத்தில் இடம்பெற்றது. இதனால் நேற்றுமுன்தினம் நீதிமன்ற அமர்வுகள் அரை மணிநேரம் தாமதித்தே ஆரம்பமானது.

கல்முனை நீதிமன்றத்தில் பணியாற்றும் தமிழ் - முஸ்லிம் சட்டத்தரணிகள் யாவரும் கலந்து கொண்ட அஞ்சலி நிகழ்வில் முன்னதாக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி எம்.கே.பேரின்பராசா பேசுகையில்:-

சுனாமி கடற்கோள் காரணமாகப் பாதிக்கப்பட்டு, நாதியற்ற நிலையில் வாழும் கல்முனைப பிரதேச மக்களுக்கு அரசு நிவாரண உதவிகளை வழங்குவதில் அரசு மாற்றாந்தாய் மனப பாங்குடன் தொழிற்பட்டு வருவதையிட்டு நாம் கவலை அடைகின்றோம்.

இயற்கை அனர்த்தமானது இன, மதம் பார்த்தோ அல்லது ஏழை, பணக்காரன் என்றோ வருவது கிடையாது. ஆனால், அரச நிவாரணப் பணியானது இனரீதியான புறக்கணிப்புடன் இருப்பதை அனுமதிக்க முடியாது.

சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டம் படுமோசமான இழப்புக்களைச் சந்தித்த மாவட்டம். அதிலும் கல்முனைப் பிரதேசம் பல உயிர்களையும், பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களையும் இழந்த மக்கள் வாழுமிடம்.

எனவே, யாராக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மககள் அனைவரையும் சமநோக்குடன் கருதி நிவாரண உதவியளிக்க முன்வரவேண்டும் இதுவே எமது உருக்கமான வேண்டுகோளாகும் - என்றார். (க-8)




# காரைதீவு கடற்கரையில் மக்கள் அழுதுபுலம்பல்

காரைதீவு,ஜன.28

ஆழிப்பேரலையில் சிக்கி பலியானவர்களின் 31ஆது நாள் ஆத்மசாந்திக் கிரியைகள் கடந்த செவ்வாயன்று காரைதீவில் சோகத்தின் மத்தியில் நடைபெற்றன. கடற்கரைப் பகுதியில் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதால் கிரியைகள் செய்ய சீலையிலான கொட்டில்கள் அமைககப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் வேகாத வெயிலில் நின்று அழுதுபடைத்து அழுது புலம்பியதைக் காண முடிந்தது. இது பார்ப்போரின் மனதை நெகிழ வைத்தது. ஒரேவேளையில் சகல இடங்களிலும் இக்கிரியைகள் நடைபெற்றன கடற்கரைப்பகுதி சுனாமி தாக்கி மறுநாள் எப்படியிருந்ததோ அப்படிச் செவ்வாயன்றுமிருந்தது.

ஒருமாதகாலமாகியபோதிலும் இடிபாடுகள் அகற்றப்படவில்லை, கனரக வாகனங்களின் தட்டுப்பாடு காரணமாக கோர அழிவுகள் அகற்றப்படாமல் இன்றும் காட்சியளிக்கின்றன. கரைச்சையை அகலமாக்கும் பணியில் சர்ச்கை ஏறபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## திருமண வாழ்வில் இணைந்து 25ஆவது ஆண்டு நிறைவு வாழ்த்து



### திரு. திருமதி நவநாதன் லிங்கேஸ்வரி

இரு மனமுங் கலந்திட பெருமணமாம் திருமணத்தில்
இணைந்த நாயகன் நவநாதன் - ஈஸ்வரி தம்பதிகளே!
நீவிர் நீடூழி வாழி! வாழி!! கலைச்செல்வம், இசைச்செல்வம்
இவை அனைத்தும் நீர் பெற்றிடவே பிள்ளைகள் நாம் வாழ்த்துகின்றோம்.

*55, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர்.*
T.P: 2226055 (41396)(22-11-15)

ந.மிதர்சன் (மகன்),
மற்றும் பிள்ளைகள்.


# ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஒருவருட சம்பள முற்பணம்

கல்முனை,ஜன.28

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஒருவருட சம்பள முற்பணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு ஒரு வருடச் சம்பள முற்பணம் வழங்கும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் பொதுநிர்வாக மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விவரம் கோரியிருந்தார். இதையடுத்து மாவட்டத்தின் சகல திணைக் களங்களிலும் கடமைபுரியும் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விவரங்கள் துரிதமாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச அரச உத்தியோகத்தர்களின் விவரம் இதுவரை அம்பாறை மாவட்ட அரச அதிபரினால் கோரப்படவுமில்லை; திரட்டப்படவுமில்லை எனப் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இது விடயத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தி கொடுப்பனவுகளை பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது அம்பாறை மாவட்ட அரச அதிபர் அசிரத்தை காட்டி வருவது தங்களுக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு அரசு வழங்க முன்வந்துள்ள ஒரு வருட சம்பள முற்பணத்தைப் பெற்றுத்தர துரித நடவடிக்கை மேற்கொள்வார்களா என வினா எழுப்புகின்றனர். (எ-க)

# குப்பிளானில் மிதிவெடி அகற்றிய பகுதி நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

குப்பிளானில் மிதிவெடி அகற்றப்பட்ட சுமார் 24ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவுள்ள நிலம் மக்களின் பாவனைக்கென நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மிதிவெடி அகற்றப்பட்ட இந்தப் பிரதேசம் யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பிரதேசத்திலிருந்து சுமார் 838பி - 4 எம்.கே.ரக மிதிவெடிகள் அகற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவின் திட்டமிடல் அலுவலர் செ.டெனிஸனால் அப்பகுதி கிராம சேவையாளரிடம் உத்தியோகபூர்வமாக ஆவணம் கையளிக்கப்பட்டது.


## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு

காலம் : 01.02.2005 செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 10.00 முதல் பிற்பகல் 3.00 மணிவரை.
இடம் : யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்.

கனடா வேதாந்த ஞான மன்றத்தினால் நடத்தப்படும் மேற்படி கருத்தரங்கில் பயிற்சிபெற விரும்பும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்க விரும்பும் புதிய ஆசிரியர்களும் இதில் பங்குபற்றலாம். மதியபோசனம் வழங்கப்படும்.

அருளாசியுரை வழங்குபவர் :
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
(2ஆவது குருமஹா சந்நிதானம் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.)

சிறப்பு விருந்தினர் : திரு.ஆர்வலன்
(தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)

விரிவுரையாற்றுவோர்:
★ செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆலோசகர், கனடா வேதாந்த ஞானமன்றம், இலங்கைக் கிளை - உப அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
★ சைவப்புலவர் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன் (J.P)
ஆலோசகர், கனடா வேதாந்தஞானமன்றம். இலங்கைக் கிளை
(உதவிக் கல்விப்பணிப்பாளர்- தமிழ் B.A,DGDE இணைப்பாளர் கலாசாரப் பகுதி யாழ்.கல்வித் திணைக்களம்)
★ சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்
(தலைவர்,கனடா வேதாந்த ஞானமன்றம், இலங்கைக் கிளை)
★ கலாநிதி அடியார் விபுலானந்தா
(ஆன்மீகத் தலைவர் கனடா வேதாந்த ஞானமன்றம் தர்மகர்த்தா கனடா பெரிய சிவன் ஆலயம்)

☞ மேற்படி நிகழ்வில் பங்கு கொள்ளும் ஆசிரியர்களுக்கு "அறநெறிக் குரு" என்னும் கௌரவப்பட்டம் வழங்கி சான்றிதழும் கொடுக்கப்படும்.
புதிய அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
இ. ஸ்ரீதரன், கனடா வேதாந்த ஞானமன்றம் இலங்கைக் கிளை. 291,நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (41394)
T.P.:2190 (43-11-15)


## முழுநாள் கருத்தரங்கு

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் பெண்களுக்கான குடும்ப வன்முறைகள் குறைத்தல் என்னும் கருப்பொருளிலான முழுநாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை விளான் சென்/அன்ரனிஸ் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. வளவியலாளராக மருதனார்மடம் இறையியல் கல்லூரி விரிவுரையாளர் வண.ஈனோ புனிதராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (3-190-202)


## நேர்முகத்தேர்வு
## PC HOUSE (PVT) LTD

எமது நிறுவனத்தில் தொழில்நுட்பவியலாளர், கணக்குப் பதிவாளர், விற்பனைப்பிரதிநிதி ஆகிய பதவி வெற்றிடங்களிற்கு விண்ணப்பித்த வர்களும், தகுதியானவர்களும் எதிர்வரும் (29.01.2005) சனிக்கிழமை காலை 11 மணிக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

PC HOUSE (PVT) LTD
#1K, Stanley Road, Jaffna. Tel:021 2226671
Tel./Fax:021 2226672 E.Mail:info @ pchouse.lk
Website:www.pchouse.lk (41395)(43-11-15)


## கொரிய அமைச்சர் தலைமையில் குழு இன்று யாழ். வருகிறது

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியை தரம் உயர்த்துவது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள கொரிய நாட்டு குடிவரவு, குடியகல்வு அமைச்சர் அன்ஸ் ஹிஸ் வொங் தலைமையிலான குழு ஒன்று இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றது.

முற்பகல் 11மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரிக்கு வருகைதரும் இக்குழுவினர் பின்னர் அரச அதிபரைச் சந்திக்கவிருக்கின்றனர்.

வடமராட்சியில் செயற்படும் சுனாமி புனர்வாழ்வுச் செயலணி அலுவலகத்திற்கும் செல்லும் குழுவினர் யாழ்.மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் சி.இளம்பரிதியை அங்கு சந்தித்துக் கலந்துரையாடுவர். அதன்பின் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரியும் கொரிய வைத்தியர் குழுவினருடன் கலந்துரையாடுவார்கள். (3-7-88)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 06 - 03 - 1951



இறப்பு 29 - 12 - 2004

### அமரர் சங்கரப்பிள்ளை செல்வராசா
(சின்னராசா - செல்வா ரான்ஸ்போட்)

நாள்கள் முப்பத்தொன்றுபோனால் என்ன
உன் நினைவுகள் என்பது போய்விடுமா?

*மேற்கு கண்டுவில் லேன்,*
*டச்சு வீதி, சாவகச்சேரி.* (41392)(43-11-15) - குடும்பத்தினர்.


## ஆசிரிய மாணவனை காணவில்லை என தாயார் முறைப்பாடு

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர் ஒருவரைக் காணவில்லையென அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மண்டைதீவு, இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 3ஆம் வருட ஆசிரிய மாண வனுமான பத்மநாதன் திவாகரன் என்பவரே காணாமற்போனவராவார்.

வேலணையிலுள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்களின் கற்றல் பயிற்சிக்காக கல்வியியற் கல்லூரியிலிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை அங்கு சென்றிருந்தார் என்றும்-அதன் பின்னர் அவர் குறித்துத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் தாயார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் காணாமற்போனோர் விசாரணை அதிகாரி ரி.மொறின் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறார். (3-7-88)

## பயிற்சிப்பட்டறை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் எய்ட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் "பிறழ்வான நடத்தை உள்ளோரை இனங்காணும் உள ஆற்றுப்படுத்தல்" என்ற தலைப்பில் அருட்தந்தை சூ.டேமியன் கருத்துரை வழங்குவார். (எ-5)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(மூத்தப்பா மணியம்)

கொடிகாமம், எருவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (2005.01.27) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மாவின் அன்பு மகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் இராமநாதனின் சகோதரனும் பார்வதிப்பிள்ளை (லண்டன்), சரஸ்வதி, அன்னலட்சுமி (லண்டன்), இராசேஸ்வரி, தெய்வநாயகி (லண்டன்), சாந்தநாயகி (லண்டன்), குகனேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நல்லநாயகி (நியூஸிலாந்து), கலாநாயகி (சுவிஸ்), கருணகலாவதி (கனடா), சாந்தநாயகி (கொழும்பு), தேவகி, துர்க்காதேவி, விக்னேஸவரன் (நியூஸிலாந்து) ஆகியோரின் பெரியதந்தையும் சுப்பையா (சாவகச்சேரி நகரசபை), பாலசுந்தரம் (பளைபாறு), நகுலபாஸ்கரன் (லண்டன்), ஈஸ்வரன் (லண்டன்), பாலசுந்தரம் (லண்டன்), சோதிமலர் (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற செல்லம்மாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எருவன் சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடமியன் இந்துமயானத்தில் 27.01.2005 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
பாலு
சுப்பையா } மருமக்கள்.

*எருவன்,*
*கொடிகாமம்.* (சி-40681)(43-11-15)



## 26.01.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200023902 இலிருந்து 200042994 வரை
சீட்டிழுப்பு இல. 1576

10 12 58 63 சுப்பர் எண் 14

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.48,15,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 48,15,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 36 | 5,000/- | 1,80,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 502 | 1,000/- | 5,02,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,647 | 500/- | 8,23,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,922 | 40/- | 9,96,880/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 23,434 | 20/- | 4,68,680/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,53,845 | 10/- | 35,38,450/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.90,09,510/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 57,60,200/-

200037736-0-02
200042601-7-44
200026364-8-80
200042978-3-94
200040125-6-57

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



## வீடு வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் தொடர் மாடியிலுள்ள முதலாம் தட்டில் இரு அறைகள்,சமையலறை, பல்கணியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

*தொடர்பு :-* 0776513672 (சி-40677)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், சுபாலி, குணால், நாசர் நடித்த
**தேவதையைக் கண்டேன்**
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பி.நே.)
(C/39654)

**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்



**ஐயா** இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிரஞ்சனாஸ் சங்கானை**



விக்ரம் கிரண் நடித்த
**ஜெமினி**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00. (பி.நே.) (C/40667)

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
**ஆயுதம்**



கா.நேரம்:10.30, 2.30, 6.30, 9.30(பி.நே.)


## ஆங்கில ஆசிரியர்களுக்கு செயலமர்வு திங்களன்று

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கான 'ஆங்கில செயற்பாடுகளின் ஊடான கல்வி' என்னும் தலைப்பிலான செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஓர் ஆசிரியரை இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறும் செயலமர்வில் கலந்து கொள்ளவரும போது உரிய கைந்நூலையும கொண்டு வருமாறும் வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (3-117)

## பொங்கல் விழா

வலி.தென்மேற்கு,ஜன.28

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் சங்கத் தலைவர் தி.இராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

(3-135)

## கண்ணீர்க் காணிக்கைகள்



எமது கழகத்தின் நீண்டகால உறுப்பினரும் கராத்தே கறுப்புப்பட்டி அங்கத்தவருமான ரமணிகாந்த் அவர்களின் அன்புச் சகோதரன்

**ரஜனிகாந்த்**

அவர்களின் திடீர் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களின் தாழாத்துன்பத்தில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரது ஆத்மாசாந்தியடையவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A.O.M.A. கராத்தேக் கழகப் பிரதம ஆசிரியர்
திரு.றேமன் கபிரியேல்,
(சி-40684) கழக மாணவர்கள் போஸ்கோ தாபனத்தினர்.


**பணிநிலை வெற்றிடம்**

- ஒப்புநோக்குநர்- பெண் (Proof Reader)
- தமிழில் நன்கு தேர்ச்சி பெற்ற அறிவு (ஆங்கில அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
- முன்னனுபவம் விரும்பத்தக்கது (ஆனால் கட்டாயமல்ல)
- 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
- இரவுநேர காவலாளி - ஆண் (Security Guard)
- வயதெல்லை 45-60இற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் 05.02.2005 ஆம் திகதிக்கு முன் காலை 11.00—மாலை 5.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்

**கரிகணன் பிறிண்டேர்ஸ்,**
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

**D.C.A.**
மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி
2002& 2003
G,A,Q.
1st in Com.
பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் விரிவுரைகள்
SLECTION TEAM
முற்றிலும் இலவச விரிவுரைகள் (சி-40670)
ஆரம்பம்:
05.02.2005 சனி
8.00 மணி a.m.
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.


## ஓராண்டு நினைவலைகள்




மண்ணில் 04.10.1936 விண்ணில் 08.02.2004

அமரர்
**சோமசுந்தரம் கந்தசாமி**
(அப்பையா)

அன்பின் இருப்பிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
சமூகத்தின் ஒளிவிளக்காய்
பண்பின் சிகரமாய்
பாரினிலே வாழ்ந்தீரே!

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (41398)(29-14-15) - குடும்பத்தினர்.




## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் பாலா அஜந் பிரவீன்

### 28.01.2005





கல்வியங்காடு விஜிஅகம் புலவனார் வீதியைச் சேர்ந்த அஜந் - சதீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் பிரவீன் அவர்கள் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

பிரவீனை அப்பா, அம்மா, அப்பப்பா- பாலசுப்பிரமணியம், அப்பம்மா - விஜயமலர், பெரியப்பா - அசோக் (லண்டன்), பெரியப்பா - அஜித் (கனடா), பெரியம்மா-சுகர்ணா (கனடா), சித்தப்பா - அருண் (கனடா), சித்தப்பா - அஜிவ் (கனடா) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் திருவருட் துணையுடன் பல்கலையும் கற்றுச் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

HAPPY BIRTHDAY

'விஜிஅகம்'
புலவனார் வீதி, கல்வியங்காடு.

தகவல்:
பாலா அசோக் (லண்டன்).

(41400)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா வல்லிபுரம்



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா வல்லிபுரம் அவர்கள் நேற்று (27-01-2005) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் -சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசித்தம்பி வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் வடிவேலு, பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சிவபாக்கியம், சிவகாமி, சரசம்மா, தங்கமணி, பரமேஸ்வரி (அமரர்), யோகேஸ்வரி, சந்திரமதி, ரேவதி(சுவிஸ்), உதயகுமாரன் (முகாமையாளர்,ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரவணமுத்து, கந்தசாமி (உரிமையாளர்,ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி), சுந்தரராஜா (பிரதேச செயலகம், சாவகச்சேரி), மகேந்திரன், முருகேசு (புகையிரத நிலைய அதிபர், சீனக்குடா), தவக்குமார், இராஜேந்திரம் (குலம் - சுவிஸ்),செல்வராணி (ஆசிரியை, டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2005) முற்பகல் 11.00 மணிக்கு மட்டுவில் வடக்கு ஆறுமுகம் சுந்தரராஜா (மருமகன்) இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் த்கனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-வ.உதயகுமாரன்,
மருமகன்-ஆ.சுந்தரராஜா.

*மட்டுவில் வடக்கு*
*(கமலாசினி வித்தியாலயம் அருகில்), சாவகச்சேரி.* (41402)

### திருமதி கனகம்மா சண்முகநாதன்



அன்னசத்திர லேன், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது அருளானந்தப் பிள்ளையார் கோயிலடி, கந்தரோடையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கனகம்மா 27.01.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் குலசேகரம் (கண்ணன்), புனிதவதி, குலசிந்தாமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சறோஜாதேவி (ஆசிரியை, யா/மட்டுவில் ம.வி.), துரைசிங்கம், கணேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மநாதன் (பிரான்ஸ்), கலாஞ்சென்றவர்களான நவபாக்கியம், தியாகராஜா, நடராஜா ஆகியோரின அன்புச் சகோதரியும் காமினி, சுதன், கிருபாகரன், சதீஸ் (சனா), பிரசாத், நிருஜன், விதுஷிகன், யதுஷிகன், சுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் கிஷாந்தன், விதுஷன், மதுஷன், தனுசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2005) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில நடைபெற்று, பூதவுடல் சங்கம்பிளவு, கந்தரோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கந்தையா உபாத்தியாயர் வீதி,*
*அருளானந்தப் பிள்ளையார் கோயிலடி,* தகவல்:
*கந்தரோடை, சுன்னாகம்.* (40686) குலசேகரம் (மகன்).

# எமது மக்களுக்கு உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தேன். இலங்கை அரசு எமது மக்களுக்கு உதவி செய்வதில் என்னென்ன தடைகளையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதை அறிந்து அதனைச் சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்துவதே எனது முக்கிய நோக்கம்.

நோர்வேயின் முக்கிய அமைச்சர்கள் இங்கு வந்து தலைவரைச் சந்தித்தபோது நானும் உடனிருந்தேன். எமது மக்களின் பிரச்சினைகளை எடுத்துவிளக்கி எமது பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப உலக நாடுகளின் உதவி தேவை என நாம் வலியுறுத்தினோம்.

இப்போது தலைவரின் பிரதிநிதியாக உங்களைச் சந்திக்க இங்கு வந்துள்ளேன். இரு தினங்கள் தலைவருடன் பேசினேன். அவரின் ஆழமான உணர்வலைகளை என்னால் புரிய முடிந்தது. சகல இராணுவ , அரசியல் நடவடிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்காக முழுப் புலிகள் இயக்கத்தையும் அதனோடிணைந்த சகல அமைப்புகளையும் இந்தப் பணியில் அவர் இறக்கியுள்ளார்.

மக்களைக் காப்பாற்றவும் அவசர உதவிகளைச் செய்யவும் எமது கடற்புலிகள், அரசியற் பிரிவு உட்பட அனைத்துப் படையணிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட சகல பிரிவுகளும் தலைவரால் மீட்புப் பணிக்கு அனுப்பப்பட்டுள்ளன. எமது விடுதலை இயக்கமே உங்களுக்குப் பேருதவி செய்து வருகின்றது என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

சர்வதேச மட்டத்திலும் இலங்கை அரசுடனும் பேச்சுக்களை நடத்தி உலகத் தலைவர்களை இங்கு அழைத்து அவர்களுடன் கலந்தாலோசித்து பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை வளம்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க எமது தலைமை முழு முயற்சிகளையும் செய்துவருகின்றது. இந்தத் தகவலை உங்களுக்குச் சொல்லத்தான் இங்கு வந்திருக்கின்றேன்.

இந்தப் பாடசாலையில் - அகதி முகாமில் - நீங்கள் வாழ்க்கையைத் தொடர நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை.

வீடமைப்புத் திட்டத்தின் கீழ், உங்களை உங்கள் சொந்தக் காணியில் குடியமர்த்தவும் மீண்டும் தொழில்வாய்ப்பை உங்களுக்கு உருவாக்கித்தரவும் பெரியளவிலான புனர்நிர்மானத் திட்டத்துடன் எமது இயக்கம் முழுமையாக - முழு மூச்சுடன் - பணியாற்றி வருகின்றது என்ற செய்தியை உங்களுக்குச் சொல்லத்தான் வந்திருக்கின்றேன்.

இதற்காக கொழும்பு அரசுடனும் நாங்கள் ஒருமட்டத்தில் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம். வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் ஏராளமான உதவிகளை நிதி உதவியோடு நிவாரணப் பொருள்களையும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொருள்கள் இங்கு வந்தடைந்ததும் எமது இயக்கத்தின் உப அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவை உங்களுக்கு அவற்றை வழங்கிக்கொண்டிருக்கின்றன.

அவசர கால உணவு, உடை மற்றும் மருந்து போன்ற அவசர உதவிகள் உங்களுக்குக் கிடைத்து வருகின்றன. ஆனால், இது ஆரம்பகால உதவிகள் மட்டுமே. இதை வைத்து கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாது என்று எங்களுக்குத் தெரியும்.

எனவே, புதிய வீடுகளை அமைப்பதற்கும் மீளமைப்பைத் துரிதப்படுத்தி அகதி முகாமில் இருந்து மக்களை அவர்களது சொந்த இடத்திற்கு திரும்பிச் செல்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

உலக நாடுகள் பெருமளவான உதவிகளைச் செய்ய வாக்களித்துள்ளன. ஆனால், இந்த உதவிகள் இலங்கை அரசு ஊடாகத்தான் வரவேண்டியிருக்கின்றது. ஓர் அரசு என்ற ரீதியில் வெளிநாடுகள் உடனடியாக தமது உதவிகளை அரசுக்கே கொடுக்கும்.

இந்த அரசு உதவி நிதியை எடுத்து எமது மக்களுக்கு அதனை சரிவர பங்கிடுமோ என்பதில் எமக்கு சந்தேகம் என்று நாங்கள் கூறுகின்றோம்.

சிங்கள அரசு சுனாமி அனர்த்தத்தை தனது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு என வழங்கப்பட்ட நிதி உதவியை வேறு வழிகளில் தனது அரசைப் பலப்படுத்தவும், தனது இராணுவ இயந்திரத்தைப்பலப்படுத்தவும், தமது அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்தவும் பயன்படுத்தலாம் என்ற நோக்கில் அரசு செயற்படுகிறது.

நாங்கள் உலகநாடுகளிடம் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளோம்.

வடக்கு - கிழக்கில் தான் பெரியளவில் அழிவு ஏற்பட்டிருக்கின்றது. வடக்கு - கிழக்கின் கரையோரப் பிரதேசந்தான் பெரிதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில்தான் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எமது மீனவச் சமூகம் பெரும் துன்பத்துக்கு ஆளாகி வந்திருக்கின்றது. இராணுவம், கடற்படையின் ஒடுக்குமுறை காரணமாக எமது மீனவச் சமூகம் நீண்ட காலமாகப் பெரும் துன்ப, துயரங்களை அனுபவித்துள்ளது. சுமைகளோடு வாழ்ந்தது அந்த நிலையில் இப்போது ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மீனவச் சமூகத்தின் துன்ப வரலாறு ஆழிப் பேரலையுடன் வந்ததல்ல. தலைவர் சொல்லியிருக்கிறார் முதலாவது ஆழிப்பேரலை இராணுவத்தால் ஏற்பட்டது என்று. இராணுவம், கடற்படை ஆகியவற்றின் கொடுமையால் பல்லாயிரக் கணக்கான மீனவர்கள் தமிழீழத்தில் கொல்லப்பட்டனர். மீனவத் தொழில்துறை பாதிக்கப்பட்டது. மீனவ மக்கள் சமாதானச் சூழலில் தமது வாழ்வை மீளக் கட்டியமைக்க முயன்றபோது இயற்கையின் அனர்த்தத்தால் இப்போது மீண்டும் ஒரு பேரழிவு ஏற்பட்டுள்ளது. இதைத்தான் இரண்டாவது ஆழிப் பேரலை என்று தலைவர் சொல்கிறார்.

நீண்டகாலமாகத் துன்பப்படும் இந்த மக்களுக்கு நிரந்தரமான வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் உலக நாடுகளிடம் கோருகின்றோம்.

போராட்டம் என்ற வகையில் அரசியல் உரிமைக்காகப் போராடுவது வேறு. இது மக்களின் பொருளாதார வளத்துக்கான போராட்டம். இதில் நாங்கள் சிறிலங்கா அரசுடன் பேசி, அரசுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பெருந்தொகை வெளிநாட்டு நிதியுதவிகள் எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வந்து சேரும் வழிகளை அமைத்துக் கொடுக்கக்கூடிய கட்டமைப்பை உருவாக்குவதற்குப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம். பேச்சு ஒருமட்டத்தில் நடக்கின்றது. கொழும்பில் இருக்கும் சமாதானச் செயலகத்துக்கும் கிளிநொச்சியில் இருக்கும் சமாதானச் செயலகத்துக்கும் மத்தியில் பேச்சுக்கள் நடக்கின்றன.

நிவாரண உதவிகளை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமத்துவமாகப் பகிர்ந்தளிப்பதற்கு இருதரப்பும் இணைக்கப்பாடு கண்டு ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்காகத் தான் பேச்சு நடக்கின்றது. இதிலும் எங்களுக்குச் சில சிக்கல்கள் இருக்கின்றன.

சந்திரிகா அரசின் நிர்வாகத்தின் கீழ் இந்தக் கட்டமைப்பைக் கொண்டுவருவது பிரச்சினைக்குரியது. தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக சந்திரிகா அம்மையார் அனர்த்தம் நிகழ்ந்த - பேரழிவு- சூழ்நிலையிலும் தனது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள யோசிக்கிறார்.

ஆனால், தலைவர் பிரபாகரன் நோர்வே அமைச்சரிடம் கூறினார், இந்த நிதியுதவி எவையும் எமது அமைப்பு ஊடாக வரத்தேவையில்லை. நீங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமாவது உதவிகளைக் கொண்டு வந்து எமது மக்களுக்கு அந்தப் பணத்தை நேரடியாகக் கொடுத்து, அந்தத் திட்டங்களை நீங்களே நின்று செய்து மக்களின் வாழ்வை வளம்படுத்தினால் போதும் - என்று

விடுதலைப் புலிகளுக்கு இந்த நிதி வரவேண்டும் என்று நாங்கள் நிர்ப்பந்திக்கவில்லை. உலகத்தின் அனுதாபத்தால் வந்த நிதிகள் எமது மக்களின் நல்வாழ்வுக்காகக் கிடைக்க வேண்டும் என்பதுதான் எமது இயக்கத்தின் நிலைப்பாடு.

உங்கள் துயரமான மனநிலை எங்களுக்குப் புரிகின்றது. உங்கள் ஆழமான உணர்வலைகள் எங்களுக்குப் புரிகின்றன. கடலை, சமுத்திரத்தைத் திட்டிப் பயன் இல்லை. எந்தநேரமும் கடல் அமைதியாகத் தான் இருக்கின்றது. சூறாவளி ஏற்படும்போது கொந்தளிக்கும். இது கடற்றொழிலாளர் சகலருக்கும் தெரியும்.

கடலுக்குக் கீழ் பெரிய பூகம்பம் ஏற்பட்டுத்தான் அனர்த்தம் நிகழ்ந்தது - என்றார் பாலசிங்கம். (க-3-12)

## கண்டி பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனவரி மாதத்துக்குரிய வேதனம் இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்திலும், போராட்டத்திலும் ஈடுபட்ட னர். (க-3)

## ஜே.வி.பியினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கக் கூடாது எனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர் எனத் தெரிகின்றது.

ஜனாதிபதிக்குச் சேறு பூசும் விதத்தில் அறிக்கை விடுவதையும் பொது கூட்டங்களில் கடுமையான சொற் பிரயோகங்கள் மூலம் அவரை விமர்சிப்பதையும் தொடர்ந்து அனுமதிக்கமுடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறும் வகையில் தன்னிச்சையாக ஜே.வி.பியினர் செயற்பட்டு வருகின்றனர். எனவே, உடனடியாக ஜே.வி.பியின் உயர் மட்டத் தலைவர்களை அழைத்து இதற்கு ஜனாதிபதி முடிவு காணவேண்டும் என மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்கள் பலரும் கோரினர்.

இதனையடுத்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து கட்சிப் பிரமுகர்களின் இக் கருத்தை அவருக்கு எடுத்துரைத்தனர் எனத் தெரியவந்தது.

ஜே.வி.பியினரின் அறிக்கைகள் மற்றும் விமர்சனங்கள் குறித்துப் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என ஜனாதிபதிஅவர்களிடம் தெரிவித்தார் என அறியமுடிந்தது.

இதேவேளை, நேற்று ஜே.வி.பியின் மத்திய குழுக்கூட்டம் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இன்று ஜே.வி.பியின் தற்போதைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் உத்தியோகபூர்வ அறிக்கை வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

## ஈரானுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்டன் ரொஹான் பத்திரன்,பிரிகேடியர் நிமல் ஜயசூரிய,கொமடோர் ஹெட்டிகம,கொமடோர் தர்மவீர, கேணல் ரம்புக் பொத்த, கேணல் ரோவேல், கப்டன் கே.டி.நாணயக்கார, பாதுகாப்பு அமைச்சின் கணக்காளர் டி.எல்.விமலசேன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த இரு வாரங்களாக ஈரானில் ஆயுதங்களைப் பார்வையிட்டு அவை தொடர்பாக இந்தக் குழுவினர் ஆராய்ந்தனர். எனினும், எவற்றைக் கொள்வனவு செய்வது என்பது தொடர்பாக அவர்கள் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடவில்லை என்று தெரிகின்றது. கொழும்பு திரும்பியுள்ள குழுவினர், இங்கு அரசுடன் விரிவாக ஆராய்ந்த பின்னரே ஆயுதக் கொள்வனவு தொடர்பாக இறுதிசெய்யப்படும் என்று தெரிகிறது.

அரசின் இந்த ஆயுதக் கொள்வனவு முயற்சி நாட்டில் பெரும் சர்ச்சையை கிளப்பி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகளை அரசு ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்துகிறது என்று விடுதலைப் புலிகள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இந்த நிலையிலேயே ஈரான் சென்ற குழுவினர் எந்த ஒப்பந்தத்தையும் இறுதி செய்யாமல் நாடு திரும்பியுள்ளனர். (க-3)

## பாலா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதியினர் தற்போது சந்திப்பின் பின்னர் லண்டன் திரும்புகின்றனர்.

நாளை சனிக்கிழமை பெரும்பாலும் பிற்பகலில் கிளிநொச்சியிலிருந்து விசேட ஹெலியில் கட்டுநாயக்காவுக்குப் புறப்படும் பாலசிங்கம் தம்பதியினர், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.45மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து விமானத்தில்லண்டன் பயணமாவார்கள் எனத் தெரிகின்றது. (க-3)

## இணக்கம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டாமல் போய்விடும் என்ற யதார்த்தத்தை இரு பக்கத் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.

இதனால், பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் இரு தரப்பும் அதிக ஆர்வமும், முனைப்பும் காட்டுகின்றன என்று கூறப்படுகின்றது.

இரு தரப்பிலும் சமாதானச் செயலகங்களின் மட்டத்திலும், அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பின் ஊடாகவும் நடத்திய பூர்வாங்கப் பேச்சுக்கள் திருப்திதரக்கூடிய சாதக நிலைமையைத் தோற்றுவித்திருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

எனினும், இணக்கநிலை ஏற்பட்டு வருவது பற்றிய செய்திகளை இப்போதைய நிலையில் உடனடியாக ஊர்ஜிதப்படுத்துவது அல்லது பகிரங்கப்படுத்துவது தென்னிலங்கையில் இது விடயத்தில் அரசுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைத் தரும் எனக் கருதப்படுவதால், இவ் விவகாரம் குறித்துக் கடும் மௌனம் பேணப்படுகின்றது.

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் இத்தகைய இணக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் வெளிப்பட்டிருப்பது அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியை எரிச்சல் கொள்ள வைத்துள்ளது.

இதனால் தனது எரிச்சலை வெளிப்படுத்தவும்-

அரச உயர்பீடத்துக்கு சங்கடத்தை எற்படுத்தவும் -

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் உருவாகக்கூடிய இணக்க நிலைக்கு வேட்டு வைக்கவும் -

வழிசெய்யும் அறிவிப்புகளை வெளியிட ஜே.வி.பி. தயாராகியது எனக் கூறப்பட்டது.

இதற்காகவே நேற்றுமுன்தினம் விசேட செய்தியாளர் மாநாட்டை ஜே.வி.பி. கூட்டியது என்றும் -

ஆனால், அரச உயர்பீடத்தினர் ஜே.வி.பியின் சில மட்டங்களோடு சமரசப் பேச்சுக்களை நடத்தி, நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளித்தனர் என்றும் -

அதனால், அந்தச் செய்தியாளர் மாநாட்டைக் கடைசி நேரத்தில் ஒத்திப்போட்டு நெருக்கடி உருவாக்குவதை ஜே.வி.பியினர் தள்ளிப் போட்டுள்ளனர் என்றும் - தெரிவருகின்றது.

இந்தச் செய்தியாளர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதையடுத்து ஜே.வி.பியைச் சமாளிக்கும் சமரச நடவடிக்கைகளை அரச உயர்பீடம் தொடர்ந்தது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் ஆகியோர் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பியினரைச் சமாளிக்கும் விதத்தில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

பொது கட்டமைப்பை ஏற்படுத்தும் அரசு - புலிகள் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்படவில்லை என்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும்-

வெளிநாட்டு உதவி ஏதும் புலிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் என்ற பேச்சுக்கே இடமேயில்லை என ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸும்-

கருத்து வெளியிட்டது இதனால்தான் என விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதுவிடயத்தில் ஜே.வி.பியை இயன்றவரை சமாளித்துப்போகவே அரச உயர்பீடம் விரும்புவதாகக் கூறப்பட்டது.

அத்தகைய உகந்த நிலைமை ஏற்படும் வரை பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக அரசு - புலிகள் இடையே இணக்கம் ஏற்பட்டிருப்பது பற்றிய விடயத்தை அமுக்கி வாசிக்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (க-3)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் நாகராணி

பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் நாகராணி அவர்கள் 27.01.2005 வியாழக்கிழமை காலமானார்.அன்னார் செல்வரத்தினத்தின் மனைவியும் முரளிதரன், அருணன், மணிமாறன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(41403)(29-15-17) தகவல்: குடும்பத்தினர்.


NEW SCIENCE COLLEGE JAFFNA

2007 A\L

பௌதிகவியல்

BY: கருணாநித

புதிய பிரிவு

SAT.,SUN.-8.00-9.00

ஆரம்பம்: 29-01-2005

(41363)

CHEMISTRY CENTRE

Temple Road. (Green Park முன்னே)

A/L 2007

GENERAL CHEMISTRY

Mon., Fri. 5-6 (S.L.T.)

(சி-40652)

By: அன்பழகன் B.Sc.

உடனடியாக விற்பனைக்கு உண்டு

★ 24 அடி நீளமும் 12 அடி அகலமும் உடைய ஒரு வியாபார நிலையத்திற்கு, அதன் 3 பக்கங்களுக்கும் பொருத்தக்கூடிய கண்ணாடி அலுமாரிகள்.

★ யாவும் புத்தம் புதியன.

★ யாவும் தேக்கு மரப் பலகைகளால், கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டவை.

★ வெளிப்புறமாகத் திறந்து மூடக்கூடிய கண்ணாடிக் கதவுகளைக் கொண்டவை.

★ விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழ்க்காணும் முகவரியில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

K.ஹரிதாஸ், மே/பா கு.பிறைசூடி, மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி. T.P: 0777 246163

அல்லது

காந்தரூபன் (சிறி) ஹோட்டல் ஜொலி, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P: 0777040752

(41315)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.